உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

தொகுதி	ருத்ரோத்காரி௵ மாசிமீ ௧உ	பகுதி
9	1924௵ பிப்ரவரிமீ 13உ	8

கடவுள் வணக்கம்.

இமையளவு போதையொரு கற்பகா லம்பண்ணு
　　மிவ்வுலக மெவ்வுலகமோ
என்றெண்ணம் வருவிக்கு மாதர்சிற் றின்பமோ
　　வென்னின்மக மேரு வாக்கிச்
சுமையெடுமி னென்றுதான் சும்மாடு மாயெனைச்
　　சுமையாளு மாக்கி நாளும்
துர்ப்புத்தி பண்ணியுள நற்புத்தி யாவையும்
　　சூறையிட் டிந்த்ர ஜாலம்
அமையவொரு கூத்துஞ் சமைந்தாடு மனமாயை
　　யம்மம்ம வெல்ல வெளிதோ
அருள்பெற்ற பேர்க்கெலா மொளிபெற்று நிற்குமீ
　　தருளோவ லாது மருளோ
சமயநெறி காணாத சாக்ஷிநீ சூக்ஷ்மமாத்
　　தமியனேற் குளவு புகலாய்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
　　சச்சிதா னந்த சிவமே. (1)

யான்றா னெனலறவே யின்பநிட்டை யென்றருணைக்
கோன்றா னுரைத்தமொழி கொள்ளாயோ—தோன்றி
யிழுக்கடித்தாய் நெஞ்சேநீ யென்னுலகஞ் சோர
வழுக்கடிக்கும் வண்ணார்போ லாய். (2)

எங்குஞ் சிவமே யிரண்டற்று நிற்கினெஞ்சே
தங்குஞ் சுகநீ சலியாதே—யங்கிங்கென்
றெண்ணாதே பாழி லிறந்து பிறந்துழலப்
பண்ணாதே நாளும் பரம். (3)

அரும்பொருள் விளக்கம்.

இமையளவு போது=ஒரு இமைப்பொழுது.

ஒரு கற்பகாலம்=பிரம்மாவின் ஆயுட்காலம். 2000 - சதுர்யுகம் பிரம்மாவிற் கொருநாள் என்றும், அத்தகைய 30 நாள் ஒரு மாதம் என்றும், அத்தகைய மாதம் 12 ஒரு வருடமென்றும், அப்படி நூறு வருடம் பிரம்மனுக்கு ஆயுள் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

மாதர் சிற்றின்பம் = பெண்ணுசை.

[பிறப்பு இறப்பிற்குக் காரணமாக இவ்வுலகில் மனிதனுக்குள்ள ஆசைகள் மண்ணுசை, பெண்ணுசை, பொன்னுசை என மூன்ருகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் பெண்ணுசையே மிகக் கொடிதாதலின் அதை மட்டுமே கூறினுர். மனிதனுடைய இவ்வுலகபோகங்களனைத்திற்கும் ஸ்திரீயே மூலாதாரமா யிருக்கிருள்.

" பாரியை யுடையான் யாவன் அவனுக்கே பற்றும் போகம்
காரியை யில்லா தாற்குப் போகத்தின் நலனெங் குண்டாம்
காரியை தன்னை நீங்கில் கருத்துறு ஜகத்து நீங்கும்
பேரியற் சகத்து நீங்கில் பிறிவில் பேரின்ப முண்டாம் "

என வசிஷ்டர் வாசிட்டத்திற் கூறி யருளினுர்.

ஒருவன் ஸ்திரீயை யிச்சிப்பதால் குடும்ப பாரம் தாங்கொணுததாகிறது. குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகப் பொருள் தேடுவதிலேயே இவன் காலமெல்லாம் செலவழிக்கப்படுகிறது. போதிய பொருள் கிடைக்காவிடின் கடன்பட்டுத் துன்பத்தை யனுபவிக்க நேர்கிறது. குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர்க்கு யாதேனும் துன்பம் நேரின் இவன் தீராத வியாகூலத்தை யடைகிருன். சில சமயங்களில் குடும்பத்தில் நேரிடும் இக்கட்டுகளை நீக்குவதற்காக, பொய்கூறல், ஒருவரை மோசம் செய்தல், களவாடல் முதலிய பாப காரியங்களைச் செய்து பிறவிப் பெரும் பிணிக்கு வித்தாகிய கருமங்களைப் பெருக்கிக்கொள்கிருன். இதனுற்ருன், "மாதர் சிற்றின்பமோ வென்னின் மகமேருவாக்கி...........இந்திர ஜாலமமைய வொரு கூத்தும் சமைந்தாடும்" என்ருர்.]

சூறையிட்டு = கொள்ளையடித்து.

இந்திரஜாலம் அமைய = இந்திரஜாலம் போன்ற

' இந்திரஜாலம் ' என்பது ஜாலக்காரன் தன் ஜாலவித்தையால் காட்டும் அதிசயமான காட்சிகள். அவை காண்போர் கண்களுக்குப் பிரத்தியட்சமாய்த் தோன்றுபவையேயன்றி உண்மையாக நிலைத்திருப்பவையன்ரும்.

பரம்பொருளினிடத்தில் *ஆரோபத்தால் தோன்றும் இப்பிரபஞ்சம் இந்திரஜாலத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஈசுவரனே ஜாலக்காரன், மாயையே அவனது ஜாலவித்தை. பிரபஞ்சமே யவன் காட்டும் ஜாலம். அஞ்ஞான வயத்தராகிய சீவர்களே அந்த ஜால வித்தையைக்கண்டு அது மெய்யென மயங்குவோர்.

"இந்திர ஜாலங் கனவு கானல்நீ ரென வுலகம் எமக்குத் தோன்ற" என்றனர் தாயுமானவரே மற்றொரு பாசுரத்தில்.

மனமாயை = மனமாகிய மாயை.

மனமே அனுபவத்தில் மாயையாக விருக்கிறது. மனதின் பசையற்றாலொழிய மாயையை வெல்லமுடியாது. இப்பிரபஞ்சமே நினைவிலிருந்து உதிக்கிறது. நினைவே மனதிற்கு வேராகும். ஆசையே மனதின் சொரூபம்.

" மனமாயை மாயையிம் மாயை மயக்க
மனமாயை தான்மாயு மற்றொன்று மில்லை
பினைமாய்வ தில்லை பிதற்றவும் வேண்டாந்
தனையாய்ந் திருப்பது தத்துவர் தானே " (திருமந்திரம்.)

(மனமாயைமாயை = மனோசங்கற்பமே மாயையாம்
இம்மாயை மயக்க = இச்சங்கற்பத்தைக் கெடுக்க
மனோ சங்கற்பத்தை யொழித்தால் மாயை யொழியும் என்பது கருத்து.)

சமயநெறி காணாத சாக்ஷி நீ = நீ ஒன்றோடொன்று மாறுபடும் சமயக் கட்டுகளுக்கடங்காது, சமயாதீதனாய், சர்வ சமயங்களுக்கும் சாக்ஷியாய் விளங்கி யிருப்பவன்.

தாயுமானவரே மற்றோரிடத்தில் "சமயாதீதப் பழம் பொருளை" என்றார்.

மாயையின் வல்லமையால் கால அளவு பலவேறு விதங்களாகத் தோன்றும். உலகத்தில் ஜீவராசிகளின் ஆயுட்பிரமாணம் பல அளவாயிருக்கிறது. நமது ஒரு பகலுக்குரிய கால அளவாகிய முப்பது நாழிகையையே ஆயுட்பிரமாணமாகவுடைய ஜந்துக்களும் உள. அவை காலையில் ஜனித்து, நடுப்பகல் யௌவனமுற்று, மாலை மறிக்கின்றன. நாம் சில சமயங்களில் இரண்டுநாட்கள் மூன்று நாட்களில் நடந்த விஷயங்கள் போல் கனவு காண்கிறோம். உண்மையில் நாம் அக்கனவைக் கண்ட காலம் ஒரு நிமிடமே யிருக்கலாகும். சாதாரண காலத்திலேயே மனம் ஏதேனும் ஓர்

---

*ஆரோபம் = கொஞ்சமாயிருக்கும் இருளில் கயிறு பாம்புபோல் தோன்றுவதுபோலவும், சூரியப் பிரகாசத்தில் கிளிஞ்சில் வெள்ளிபோல் தோன்றுவது போலவும், கானலில் நீர்போல் தோன்றுவதுபோலவும், ஒருவஸ்துவில் இல்லாத வேறொருவஸ்து பிராந்தியால் தோன்றுவதற்கு ஆரோபம் அல்லது அத்தியாசம் என்று பெயர்.

விஷயத்தில் அமிழ்ந்திருக்கும் சமயத்தில் காலங்கழிந்தது நமக்குத் தெரிவதில்லை. மனம் அடியோடு ஒடுங்கி யிருக்கும் சுழுத்தியிலும் கால அளவு தோன்றுவதில்லை. காலமாயை யிவ்வாறிருப்பதால் "இமைமயளவு போதையொரு கற்பகாலம் பண்ணும்" என்றார்.

இத்தகைய மனமாயையை வெல்வது மிக அரிது. சதா இச்சையென்ற காற்றின் வழியே அலைந்துகொண் டிருப்பதையே சுபாவமாக வுடைய இம் மனதை ஒரு கணமேனும் அலையவொட்டாது ஒரு நிலையில் நிற்கச் செய்தல் மிகக் கஷ்டம். இச்சை யொழிந்தாலன்றி மனம் அடங்காது. இதனாற்றான் "மனமாயை யம்மம்ம வெல்ல வெளிதோ" என்றார். (ஓகாரம் எதிர்மறைப் பொருளது)

2. யான் = நானென்னும் அகங்காரம்.

தான் = எனதென்னும் மமகாரம்.

அருணைக்கோன் = அருணகிரிநாதர்.

அகங்கார மமகாரங்கள் ஒழியுமட்டும் ஆனந்த நிலையாகிய நிஷ்டை சித்திக்காது. நெஞ்சின் அலைவு ஒழிந்தால்தான் நிஷ்டை கூடும். மேற்கண்ட அகங்கார மமகாரங்கள் ஒழிந்தால்தான் மனச்சலனம் நீங்கும் என்பது கருத்து.

3. எங்கும் சிவமே = அகண்டாகார சிவ சொரூபமே சர்வமுமாய் நிற்கின்றதென்ற நிலையில்.

இரண்டற்று நிற்கில் = முன்னிலைச் சுட்டும் தற்போதமு மொழிந்து நிற்கில்.

சுகம் ஆக்கும் = ஆனந்தம் சித்திக்கும்.

ஆகையால் மனமே நீ சதா அலைந்துகொண்டிருந்து என்னைப் பிறப்பிறப்பாகிய துன்பத்தில் உழலும்படி செய்யாதே என்றார்.

ஆனந்தபோதினி

உருத்ரோத்காரிஞூ மாசிமீ கவ

சென்னையில் யாசகர்.

ஒரு தொழிலைச்செய்து அதன் வழியாய்ச் சீவிப்பதை விட்டு அன்னியரிடம் பணம் உடை ஆகாரம் முதலியவற்றைக் கெஞ்சிக் கேட்டு வாங்கி அதன் வழியாய்ச் சீவிப்போரே யாசகர் எனப் படுவர். உலக வாழ்க்கையில் எப்படிப்பட்டவராயினும் இன்னொரு வரிடம் ஒன்றைக்கேட்டு வாங்காம லிருக்கமுடியாது. ஆனால் அப்படி வாங்கும்போது, வாங்கும் பொருளை மறுபடி திருப்பிக் கொடுத்து விடுவதாய்க் கூறி வாங்கி அவ்வாறே கொடுத்து விடு கிறோம். அப்படி வாங்குவதற்குக் கடன் என்று பெயர்.

யாசிப்பவர்களுக்கு அவர்கள் வேண்டியதை யளிப்பதே தருமம் எனப்படுகிறது. இதுவே ஈகை யென்பதாம். இரப் போர்க்கீவது உயர்ந்த குணமாகும். இரப்பதோ தாழ்ந்த இழி வான நடக்கையாகும்.

"இட்டார் பெரியோர் இடாதா ரிழிகுலத்தோர்" என்று ஆன் றோர் கூறினர். ஔவைப் பிராட்டியார் "ஏற்பதிகழ்ச்சி" என்ற னர். அவ்வம்மையாரே "ஐயமிட்டுண்" என்றனர்.

இந்த இரண்டு வாக்கியங்களையும்பற்றிச் சிலர் "பிச்சை யெடுப்பது இழிவு என்று கூறிவிட்டு, பிச்சைக்காரருக்கு அன்ன மிட்டுப் புசி என்று கூறுவது ஒன்றுக்கொன்று முரணாக விருக்கி றது" எனக் கூறுகிறார்கள். இது அறியாமையே யாகும்.

உலகில் இரப்போரும் ஈவோரும் எப்போதுமே யிருப்பர். ஆயினும் இரப்பது இழிவு என்று அறிந்து தம்மாலியன்றவரை யந்த வழிச் செல்லாமல், பாபமற்ற ஒரு தொழில் செய்து சீவிக்க முயலவேண்டுமென்று அறிவுறுத்தவே யவ்வாறு கூறினர். மனித னுக்குச் சீவகாருண்யம் அவசியம் இருக்கவேண்டிய குணமாகும். இதுவே அறத்திற்கு வித்தாகும். அதிலும் அன்னதானம் மிகச்

சிறந்தது. பசி யென்றவர்களுக்கு அன்ன மளிப்பது முக்கிய தருமம். அதை வற்புறுத்தவே "ஐயமிட்டுண்" என்றனர். நமது புண்ணிய பூமியாகிய இப்பரதகண்டமே அறத்தில் சிறந்ததாகும்.

முற்காலத்தில் நம் நாட்டார் தாங்கள் போஜனம் செய்யும் போது வீதியில் சென்று அதிதிகள் யாரேனு மிருக்கிறார்களா வென்று பார்த்து ஒரு அதிதிக்கேனும் அன்னமிட்டே யுண்பார்கள். அறத்தின் பெருமையை யுணர்ந்த நம்முன்னோர் அதை முப்பத்திரண்டு வகுப்பாகப் பிரித்திருக்கிறார்கள். அந்த முப்பத்திரண்டு தருமங்களிலும் அன்னதானம், கல்வித்தானம் இரண்டுமே மிகச் சிறந்தவை. கல்வித்தானம் எல்லாராலும் செய்யக்கூடியதல்ல. அன்னதானமோ எவரும் செய்யக்கூடியது. இப்போதும் யாசகம் எடுக்கும் சிலர் வீடுவீடாய் அன்னம் கேட்டுக் காவடியில் வாங்கிப்போய் வேறு சில பரதேசிகளுக்கும் அன்னமளித்துத் தாங்களும் புசிக்கிறார்கள். இல்லறத்தார்க்கு விதிக்கப்பட்ட கடமைகளில் அதிதிக்கு அன்னமளித்தபின்பே புசிக்கவேண்டுமென்பது ஒரு முக்கியவிதி. ஆனால் இக்காலத்தில் பெரும்பாலர் போசனத்திற்கு உட்காரும்போது தெருக்கதவை மூடித் தாளிட்டு விடுவதையே விதியாக வைத்துக்கொண் டிருக்கிறார்கள்.

பூர்வீகத்திலிருந்தே ஈகையில் இணையற்றோர் நம் நாட்டில் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு வள்ளல்கள் என்று பெயர். கொடையிற் சிறந்த அவர்களைத் தலை வள்ளல், இடை வள்ளல், கடை வள்ளல் என மூத்திரமாய் நம் நாட்டார் பிரித்திருக்கிறார்கள். அத்தகை வள்ளல்கள் வேறெந்த நாடுகளிலும் இருந்ததாகச் சரித்திரங்களில் காணப்படவில்லை.

இவர்களில்,

முதலெழு வள்ளல்கள்:—குமுணன், சகரன், செம்பியன், துந்துமாரி, நளன், நிருதி.

இடை யெழு வள்ளல்கள்:—அக்குரன், அந்திமான், அரிச்சந்திரன், கர்ணன், சந்திமான், சிசுபாலன், தந்தவக்கிரன்.

கடை யெழு வள்ளல்கள்:—எழிலி, ஓரி, காரி, நள்ளி, பாரி, பேகன், மலையன் என்பவர்களே.

இவ்வாறே யாசகர்களையும் முத்தரத்தினராகப் பிரிக்கலாகும்.

1-வது—வயோதிகத்தாலோ, அவயவக்குறைவாலோ எவ்வகைத் தொழில் செய்யவும் சக்தியின்றி, போஷிப்போரும் இல்

லாம லிருப்பவர்கள். தருமம் செய்வதற்கு இவர்களே தகுந்த பாத்திரமாவர். இத்தகையோர்க்குத் தருமமளிப்பது அவசிய மாகும்.

2-வது—தொழில் செய்யச் சக்தி யுடையதும் அவயவக் குறைவில்லாததுமான தேகத்தோடிருந்தும் யாசகம் செய்வதையே தொழிலாகக்கொண்டு ஜீவிப்பவர்கள். இவர்களில் ஒரு சாரார் யாசகம் செய்வதையே குலத்தொழிலாகக்கொண்டிருக்கிறார்கள். மற்றபடி இலௌகீகத்தில் இவர்கள் இல்லறவாசிகளாய்ப் பெண்டுபிள்ளைகளோ டிருப்பவர்களே. இவர்கள் யாசகம் செய்தே செல்வமும் சேர்க்கிறார்கள்.

இவர்களில் தனியாக இருப்போர்களில் சிலர் விபூதி உருத்திராக்கம் அல்லது திருமண் துளசிமணிமாலை முதலிய சின்னங்களை யணிந்து ஈசுவர நாமங்களை யல்லது தோத்திரப் பாடல்களைக் கூறிக்கொண்டு யாசகம் செய்கிறார்கள். இவர்கள் மனதிற்கும் இவர்கள் வாயால் கூறும் பாடல்களுக்கும் ஒரு சம்பந்தமுமில்லை. இவர்களெல்லாம் சோம்பேறிகளாய் அன்னியர் கஷ்டத்தினால் சீவனம் செய்பவர்கள்.

உலக போகங்களின் அநித்தியத்தை யுணர்ந்து இச்சை யொழித்து விரக்தி யடைந்து, சதா ஈசுர சிந்தனையி லிருந்து கொண்டு, பசிவந்தபோது ஜாதிமதபேதமின்றி எங்கேனும் யாரையேனும் ஆகாரம் கேட்டு வாங்கி யுண்போர்களுமுண்டு. இவர்களை யிந்த யாசகர் கூட்டத்தில் நாம் சேர்க்கவில்லை. ஏனெனில் இவர்கள் சந்நியாசிக்குரிய காஷாயம் முதலிய சின்னங்களை யணிந்திருந்தாலும் இல்லாவிடினும் சந்நியாசிகளே யாவர். ஏனெனில் சந்நியாசத்திற்கு விரக்தி காரணமேயன்றி வேடங் காரணமன்று. இத்தகையோரை ஈசுவரனாகவே கருதி பக்தியோடு உபசாரம் செய்து இவர்களுக்கு உண்டியளிப்பது ஈசுவரனுக்கே செய்தது போலாகும். இவர்கள் தாங்கள் புசிக்கும் அன்னத்தை ஈசுரார்ப்பணம் செய்பவர்கள். ஆனால் இத்தகையோர் சாதாரணமாய்க் கிடைப்பவர்களல்ல.

யாசகர்கள் மலிந்துள்ள நாடு தரித்திரத்தைக் காட்டுகிறது. தரித்திரத்தில் நம் தாய்நாடே யிப்போது தலைசிறந்து விளங்குகின்றது. அதற்குக் காரணம் கூறப்புகின் ஈண்டு விரியும். இப்போது நம் நாட்டில் மேற்கண்ட யாசகர் தவிர வேறு இரண்டுவித

யாசகர் உற்பத்தியா யிருக்கிருர்கள். அவர்கள் டிராம்வண்டி யாசகரும், இரயில்வண்டி யாசகருமே.

சிறுவயதுடைய பிள்ளைகள்கூட டிராம்வண்டியின் கூடவே வயிற்றிலடித்துக்கொண்டு ஓடி வருகிருர்கள். பத்து வயது முதற் கொண்டுள்ள ஆண்மக்கள் பெண்மக்கள் இருபாலாரும்-நல்ல சுக தேகிகள், தொழில்செய்து ஜீவிக்கச் சக்தியுடையோர் - இரயில் வண்டிகளில் பாட்டுப்பாடிப் பிச்சை யெடுத்துக்கொண்டே செல்கிருர்கள். இவர்கள் சென்னையிலிருந்து பொன்னேரி, திருவள்ளூர், செங்கற்பட்டு முதலிய இடங்கள் வரையில் செல்கிருர்கள். இவர்களால் களவுகூட நடப்பதாகக் கூறப்படுகிறது. பிரயாணிகளுக்கு இவர்களால் தொந்திரவதிகம். இரயிலதிகாரிகள் இவர்களைத் தாராளமாய்க் கும்புகும்பாய்ப் பிரயாணச்சீட்டில்லாமலே செல்லும்படி விட்டுவிடுகிருர்கள்.

இங்கிலாந்தில் யாசகம் செய்வோரைப் பிடித்துப்போய் அதற்கென்று அமைக்கப்பட்டிருக்கும் தொழிற்சாலைகளில் விட்டுத் தொழில்செய்யச்செய்து கூலிகொடுத்து அவர்களை நல்வழிப் படுத்துகிருர்கள். ஆனல் நம் நாட்டிலோ தொழில் செய்யச் சக்தியற்ற யாசகர்களை, கூன் குருடு முடம் முதலியவர்களைக்கூட ஆதரிப்பார் ஒருவருமில்லை. அக்குற்றத்தை யார்மேல் சுமத்துவது. வீண் பெருமைக்குப் பணவிரையம் செய்யும் நம் நாட்டுச் செல்வர்கள் மேல்தான் சுமத்தலாகும். நம் நாட்டைப்பற்றி நமக்கே அக்கரையின்றேல் அன்னியர்க்கு எப்படி யுண்டாகும்.

நம் நாட்டுக் கைத்தொழில்களை யுஜ்ஜீவிக்கவேண்டிய அவசியம் நேர்ந்திருக்கும் இக்காலத்திலேனும் செல்வவந்தர்கள் நெசவுச்சாலை, நூல் நூற்கும்சாலை முதலிய தொழிற் சாலைகளைத் தாபித்து தேகபலமுள்ள யாசகர்களைக் கொண்டு தொழில் நடத்தினல்,அவர்களும் கௌரவமாகச் சீவனம் செய்வார்கள். தொழிற் சாலைகளைத் தாபித்தோர்க்கும் இலாபம் கிடைக்கும், நாட்டுக் கைத்தொழில் விர்த்தி யடையும், வர்த்தகமும் ஓங்கும், தாய்நாடு முன்னேற்றமடையுமன்றே.

உடை யெப்போதும் வேண்டுவதே அது கெட்டுப்போகிற சரக்குமல்ல. நாமோ நம் க்ஷேமத்தையும் மானத்தையும்கூடக் கருதாமல் உடைக்கும் அன்னிய நாட்டை யெதிர்பார்த்துக்

கொண்டிருந்து இலக்குமியை நாட்டைவிட்டோட்டினோம். இப் போதுதான் சற்று அறிவு உதித்திருக்கிறது. இனியேனும் நம் நாட்டுச் செல்வவந்தர்கள் நாட்டுத்தரி நெசவுச் சாலைகளைத் தாபித்து நம் பாரதமாதாவின் தரித்திரத்தையகற்ற முயலவேண்டாவோ. இது பெரும் புண்ணியத்தையு மளிக்குமன்றோ. தேசாபிமானமுடைய புண்ணியவான்களிற் சிலர் ஆங்காங்கு முன்வந்து முயற்சி யெடுத்துக்கொண்டால் இது முடியாத காரியமன்றே. இத்தகைய முக்கியமான விஷயங்களைக் கருதாமல் மேல்போக்கான சம்பாஷணையிலேயே யிருந்தால், எக்காலத்தில் நம்நாடு சீர்படுமோ அறியோம். நம் நாட்டார் இன்னும் சுயநலத்தையும் வீண்வேஷமாகிய கௌரவத்தையும் கருத்தில் வைத்து அவற்றிற்காகப் பணத்தைத் தாராளமாய் விரையம் செய்வதாயின் கடவுளுக்கே அது ஒப்பாது. எல்லாம் வல்ல அக்கருணாநிதியே நாம் நல்வழியில் செல்ல நமக்கு அறிவுறுத்த வேண்டுமாய்ப் பிரார்த்திப்போமாக.

ஓம் தத் ஸத்.

சகோதரத்வ பாவனை.

(254-ம் பக்கத் தொடர்ச்சி.)

நாம் சுகவாழ்வைப் பெற்று, புகழுடன் விளங்கி, நித்தியானந்தப் பேற்றுக்கு யோக்கியராவதற்கு, சகோதரத்வபாவனையே வழி காட்டி என்று சென்ற மாதப் பத்திரிகையில் விளக்கினோம். இப்போது அச் சகோதரத்வ பாவனையை ஸ்ரீராமபிரான் எவ்வாறு நடத்திக் காட்டினரென்பதைப்பற்றிச் சிறிது பேசுவாம்.

ஸ்ரீராமபிரான் இளம்பிராயத்திலேயே இன்பத்திலும் துன்பத்திலும் சமமான நோக்கத்தைக் கொண்டிருந்தார். இந்த நோக்கம் சகோதரத்வ பாவனைக்கு இன்றியமையாதது. தமது பிரஜைகளில் எவரையேனும் சந்திக்க நேர்ந்தால் அவரை அன்புடன் நோக்கி இனியமொழிகளால் க்ஷேமாதிசயங்களை விசாரிப்பார். சக்ரவர்த்தி, தாசரதியைப் பார்த்து "இனி இந்த இராஜ்யபாரத்தை என்னால் தாங்கமுடியாது எப்போது தக்க புத்திரர்கள் எனக்கு ஏற்பட்டுவிட்டார்களோ அப்போதே நான் இப்பாரத்தை அவர்களிடம் ஒப்பித்துவிட்டு, என் ஆத்மா கடைத்தேறும்படியான மார்க்கத்தில் பிரவேசிக்கவேண்டும். ஆகையால் உத்தம குணங்கள் பொருந்திய நீயே இதனை யேற்றுக்கொண்டு என்னை விடுவிக்கவேண்

டும்'' என்றார். இரகுநாயகன் அதற்கு உடன்பட்டார். உடனே கைகேயி இதனை உணர்ந்து,கூனியின் துர்ப்போதனைக்குட்பட்டுத் தான் முன்னதாகவே பெற்றிருந்த இரண்டு வரங்களை இப்போது பயன்படுத்திக்கொள்ள அனுமதிகொண்டு, ஒரு வரத்தால் இரகுநந்தனை வனத்துக்கனுப்பவும், மற்றொன்றால் தன் மகன் பரதனை அரசாளச் செய்யவும் நினைத்து, முடிசூட்டிக்கொள்ள ஆயத்தமாயிருந்த ஸ்ரீராமபிரானை அழைத்து ''இராமா! பரதன் அரசாளப் போகிறான். ஆதலால் நீ பதினான்கு வருஷம் வனவாசஞ் செய்துவரவேண்டும். இது சக்ரவர்த்தியின் கட்டளை'' என்றனள். இம்மொழி கேட்டதும் சீதாபதி பெருங்களிப்படைந்து "அம்மா! மகா பாக்கியம். இராஜ்யத்தை நான் ஆண்டாலென்ன, என் தம்பி யாண்டாலென்ன? இரண்டுமொன்றே. என் பின்னவனாகிய பரதன் பெற்ற செல்வம் நான்பெற்ற தென்பதற்குத் தடையாது?'' என்றனர். இவ்வாறு ஸ்ரீராமபிரான் பேசும்போது அவருடைய முகம், எவ்விதமான வாட்டத்துக்கும் இடந்தராது,சித்திரத்தில் தீட்டப்பெற்ற மலர்ந்த செந்தாமரைப் புஷ்பத்தைப்போலும் விளங்கியது. இதனால் அவர் சுகதுக்கங்களில் சமநோக்குடையவரென் றேற்பட்டது.

ஸ்ரீராமபிரானுக்கு இலட்சுமணன், பரதன், சத்துருக்கினன் என்கிற தம்பிமார் மூவருண்டு. இவர் வனத்திற்குப் புறப்பட்டபோது முதல் முதல் குகன் என்னும் வேடர்தலைவனைச் சந்தித்தார். குகன் இவரிடத்தில் கரை கடந்த அன்புகொண்டு இவரை விட்டுப் பிரிய மனமில்லாதவனா யிருந்தான். இவர்க்கு வேண்டும் பணிவிடைகளைக் குறிப்பறிந்து வெறுப்பின்றிச் செய்து வந்தான். இவரும் அவன் திறத்தில் பேரன்புடையவரானார். பிரியநேர்ந்தபோது குகனை ஓர் ஏழை வேடனென் றெண்ணாமல் ஸ்ரீராமபிரான் அவனைப்பார்த்து "சகோதர! நின் நட்பைப்பெற நான் செய்த புண்ணியமே புண்ணியம். நீயே எனக்கு ஆருயிர்த் தோழன். இந்த இலட்சுமணனாகிய என் தம்பி உனக்குந் தம்பியே. என் மனையாளான இச்சீதை உனது கொழுந்தி. இது உபசாரமொழி யன்று; உண்மை மொழியே'' என்று கூறி அவனை மார்பிறுகத் தழுவி உச்சி மோந்தனர். நிற்க,

ஸ்ரீராமபிரானைத் தேடிவந்த பரதனும் இவ்விஷயத்தை யுணர்ந்து குகனிடம் சகோதரத்வம் பாராட்டினான். அப்போது "இவன் யார்?" என்று வினவிய கோசலாதேவியைப் பார்த்துப் பரதன் "அம்மா! இப்பெருந்தகை எங்களண்ணனால் ஆதரிக்கப் பெற்றவர். அண்ணாவுக்கு இளைய சகோதரராவர். எனக்கும் மற்றையோர்க்கும் மூத்தவராக வேண்டும்'' என்று மொழிந்தனன். அது கேட்டுக் கௌசல்யை "அப்படியா? மெத்தவும் சந்தோஷம். அப்பா பரதா! நீங்கள் 'ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை நெடுங்காலம் அளித்திரென்றாள்.'

இது விஷயமாய்த் திருமங்கை மன்னரும், அன்பாயினு ரெவரிடத்தும் எவ்வித வித்தியாசமுமின்றிப் பகவான் காட்டுங் காருண்யத்தை வியந்து,

"ஏழை *ஏதலன் கீழ்மகன் என்னாது
இரங்கி மற்று†அவற்கு இன்னருள் சுரந்து
‡மாழை மான் மடநோக்கி யுன் தோழி
உம்பி எம்பி யென்று ஒழிந்திலை உகந்து
தோழன் நீஎனக் கிங்கொழி என்ற
சொற்கள் வந்து அடியேன் மனத்திருந்திட
ஆழிவண்ணா! நின் அடியிணை யடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத் தம்மானே"

என்று பாடியுள்ளது கவனித்தற் குரியது.

மற்றொரு சமயம் ஸ்ரீராமபிரான் சுக்கிரீவ னென்னும் வானர பூபதியின் நட்பை யங்கீகரித்தபோது, அப்பெருமான் அவனை நோக்கி, "சகோதர! இனி நானுனக்குச் சொல்லவேண்டிய தென்னவிருக்கின்றது. தேவலோகத்திலாகிலும் சரி, இப்பூலோகத்திலாகிலுஞ் சரி, உனக்கு விரோதஞ் செய்தவர் எனக்கு விரோதஞ் செய்தவராவர். நற்குண நற்செய்கையில்லாதவராயினும் உன்னை நேசித்தவர் என்னை நேசித்தவராவர். உன் சுற்றத்தார் என் சுற்றத்தாரே. நீ நிர்ப்பயமாகவும் சுகமாகவும் இருக்கலாம்" என்றார். இது சகோதரத்வக் கட்டுப்பாட்டை நன்கு விளக்குகின்றது.

"சீதா பிராட்டியைத் தேடிப் பிடிக்க எனது சேனைகளை நாலாபக்கங்களிலும் அனுப்புவதற்குக் கார்காலம் கழிந்ததும் உம்மிடம் வருவேன்" என்று ஸ்ரீராமபிரானுக்கு வாக்களித்துச்சென்ற சுக்கிரீவன், அக்கார்காலங் கழிந்தும் வாக்களித்தபடி வரவில்லை. அப்போது ஸ்ரீராமபிரான், இலக்ஷ்மணரை யழைத்து "தம்பி! சுக்கிரீவன் நமக்குதவிபுரிய வருவதாகச் சொன்ன கெடு முடிந்தும் அவன் வராதிருக்கும் காரணம் தெரியவில்லை. நீ உடனேபோ யறிந்துவா" என்று சொல்லி அனுப்பினார். இலக்ஷ்மணரும் கோபாவேசராய் "இதோ அறிந்துவருகிறேன்" என்று புறப்பட்டார். இப்புறப்பாட்டைக் கண்ட ஸ்ரீராமபிரான் "இவன் நோக்கத்தைப் பார்த்தால் கிஷ்கிந்தையையே முற்றும் அழித்துவிடுவானபோ லிருக்கிறதே" என்று நினைத்து, அவரை மறுபடியும் கூப்பிட்டு, "தம்பி! பிழை ஜீவரிடத்தில் குடிபுகுவது இயற்கை. அதுபற்றி அவர்களைக் கருணையின்றி வருத்துதல் கூடாது. நயபயத்தாலேயே கண்டிக்கவேண்டும். சுக்ரீவன் பெரும்பிழை யொன்றுஞ் செய்துவிடவில்லை. பின்னரதை நீ நன்குணர்

---

*ஏதலன் - அயலான்; †அவற்கு - குகனுக்கு; ‡மாழை - அழகு; மடநோக்கி - நிர்த்தோஷமான பார்வையை யுடைய சீதாபிராட்டி.

வாய். "சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே" என்னும்நீதியை மறவாதே. ஆயினும்,

" எஞ்ச லன்னவ ரைகலிற் றாவது
கஞ்ச மன்று மனுவழக் காதலால்
அஞ்சி லம்பதி லொன் றறியாதவன்
நெஞ்சில் நின்று நிலாவ நிறுத்துவாய் "

அடா! தம்பி! விஷத்துக்குச சமானமானவரை வருத்துவது தப்பாகாது. அது மனுநீதியே.

" துர்சனரும் பொன்னும் தூடியும் தூரகதமும்
அர்சமற முன்னிற்கும் ஆயிழையும் — நச்சரவும்
கண்டித்த எள்ளும் கரும்பும் இளநீரும்
தண்டித்தார்க் கன்றோ சயம் "

என்று தருமநூல் கூறுகின்றது. சுக்கிரீவனோ 'அஞ்சிலம்பதி லொன்றறியாதவன்' அதாவது நிரக்ஷரகுக்ஷி. (அஞ்சு + அம்பது + ஒன்று = 56 எழுத்து — இதில் ஒன்று மறியாதவன்) மந்திரியான மாருதியால் நடத்தப்படுபவன் ('ஐம்பது', 'அஞ்சு'- போலி). எழுத்துவாசனை அவனுக்கிருந்தால் 56-வது வருஷத்தின் பெயரையாவது அவன் மறப்பானா? அது துந்துபி அல்லவா? துர்துபி என்னும் அரக்கனது பெருத்த உடலைத் தூக்கி யெறிய செய்து நமது பராக்கிரமத்தைச் சோதித்தறிந்தவனாயிற்றே. ஒருவேளை அவன் "நாம் மலைப் பிரதேசத்தில் வசிப்பதால் நம்மை இங்கு வந்து எவரும் ஒன்றஞ் செய்யமுடியாது" என்று நினைத்திருக்கலாம். 'அஞ்சிலம்பதில்' அதாவது உலகிலுள்ள அழகிய மலைகளில் அவன் இக்கிஷ்கிந்தையைத் தவிர வேறொன்றையறிந்திருப்பான். அறிந்திருந்தால் சொன்ன வாக்கினின்றுந் தவறுவானா? நல்லது அஸ்திர வித்தையிலாவது தேர்ந்தவனா? 'அஞ்சிலம்பதில்' அழகிய சில அஸ்திரங்களுள் — ஒன்றும் பிரயோகிக்கத் தெரியாதவன். கடைசியில் அவன் 'அஞ்சிலறியாதான் ஐம்பதிலுந்தானறியான' என்கிற பழமொழிக் கொப்பானவனே. அவனை நாம் காப்பதாக வாக்களித்திருக்கிறோம். ஆகையால் நீ அவனைக் கடினமான தொந்தரைக்குட்படுத்தாமல் அவன் மனதிற் பதியும்படி வேண்டிய புத்திமதிகளை சொல்லி அழைத்துவா" என்றனர்.

சகோதரத்வம் பூண்டவர்க்குள் தவறு நேரின் அதைச் சாந்தமாகவே நீக்கிக்கொள்ளவேண்டுவது அன்னோர் கடமை என்பதை மேற் சொன்ன பாடல் தெரிவிக்கின்றது.

அண்ணனால் அநாதரிக்கப்பட்ட விபீஷணர் "உடன் பிறவா மாமலையிலுள்ள மருந்தே பிணிதீர்க்கும்" என்று ஸ்ரீராமபிரானிடம சரணாகதியானார். பண்டித சிரோமணியான ஆஞ்சநேயரைத் தவிர எனையோர் யாவரும் "இவன் நமது பகையாளியின் தம்பி. உளவறிந்துபோக இங்கு

வந்திருக்கிறான். இவனை நமது கூட்டத்திற் சேர்த்துக்கொண்டால் அது நமக்கே கெடுதியை யுண்டாக்கும். ஆதலால் இவனை உடனே அகற்றி விடவேண்டும்” என்று மொழிந்தனர். மாருதி மாத்திரம் “நான் பார்த்த வரையில் இவ் விபீஷணர் மிக்க தூய்மையும், தக்க வாய்மையும், மற்று முள்ள சுகுணங்களும் கொண்டவரென்றே தெரிந்துகொண்டேன். அடைக்கலம் புகுந்தோரை ஆதரிப்பதுதான் நமக்கழகு” என்றனர்.

ஸ்ரீராமபிரான், “ஆம். சரணடைந்தோரைத் தள்ளலாகாது. விரோதி யாயினும் சரணம் என்று வந்தால் அவனை ஆதரிப்பதுதான் ஆண்மகனுக் கழகு. அவ்வாறு ஆதரிப்பதால் ஆதரித்தவனுக்குத் துன்பம் நேரிடினும் அது புகழாகவே முடியும்.

‘ உடைந்தவர்க் குதவா னாயின் உள்ளதொன் றீயா னாயின்
அடைந்தவர்க் கருளா னாயின் அறம் என்னும் ஆண்மை என்னும் ’

என்றன்றோ நூல்கள் முறையிடுகின்றன. ஆதலால் இவ்விபீஷணனை ஆதரிப்பதே நமக்குரியகடன்” என்று சொல்லி, விபீஷணரை முகமலர்ச் சியோடு நோக்கி, “சகோதரா! உனது தந்தையாரான சக்ரவர்த்தி நெடுங் காலம் புத்திரரின்றி மனக்கவலை கொண்டிருந்தார். மகரிஷிகளின் உதவி யால் முடிவில் நான்கு புத்திரர்களைப் பெற்றெடுத்தார். அந்நால்வரில் நானும் இலக்ஷ்மணனும் அவருடைய கட்டளையால் கானகம் வர நேர்ந் தது. இங்கு எங்களுக்குச் சகோதரப் பெருக்கம் விர்த்தியாய் அவருக் குப் புத்திரபாக்கியத்தை அதிகரிக்கச் செய்தது. எப்படியென்றால்,

‘ குகனொடும் ஐவரானோம் முன்பு பின் *குன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானோம் எம்†முழை யன்பிற் போந்த
‡அகனமர் காதல் ஐய! நின்னொடும் எழுவரானோம்
புகலருங் கானந் தந்து புதல்வரிற் ¶பொலிந்தான் §உந்தை”

என்றார்.

குகனிடம் ஸ்ரீராமபிரான் வெளியிட்ட கருணைவிசேஷத்தை நினைத் துப் பிராட்டியும், பெருமூச்செறிந்து, “இவனே புருஷோத்தமன்” என்று கண்களினின்றும் நீரானது ஆறாய்ப்பெருக,

“ ஆழநீர்க் கங்கை *யம்பி †கடாவிய
ஏழை வேடனுக் கெம்பியுன் றம்பிநீ
தோழன் நங்கை கொழுந்தி யெனச் சொன்ன
ஆழி நம்பினை யுன்னி ‡யழுங்குவாள் ”

என்பதும் கருதற்பாலதே.

[*குன்று சூழ்வான் மகன் - சூரிய புத்திரரான சுக்ரீவன். †உழை - இடம். ‡அகனமர் காதல் - மனப்பூர்வமான அன்பு. ¶பொலிந்தான் - சிறந்தான். §உந்தை - உனது தகப்பன்.]

[*படகு; †செலுத்திய; ‡வருந்துவாள்.]

இங்கு கர்ண பரம்பரையாக வழங்கும் மற்றோரதிசயமும் நோக்கத் தக்கதே. அதாவது இராவண சம்மாரமானபின், ஸ்ரீராமபிரான் அயோத்திக்கெழுந்தருளி இராஜ கோலத்துடன் பரதலக்ஷ்மண சீதா சமேதராய் மந்திரி முதலிய மேதாவியர் சூழக் கொலுவீற்றிருக்கும் நாள்களில் ஒரு நாள், ஸ்ரீராமபிரானைக் குழந்தைப் பருவத்தில், வீதியில் விளையாடி வந்த போது, கண்டு களித்து வந்த ஓரனாதை ஏழை மனிதன், அவர் காட்டுக்குப்போனது கேட்டு அதுமுதல் அழுதகண்ணுஞ் சிந்தியமூக்குமா யிருந்தவன், அவர் திரும்பிவந்து அரசுபுரிகிறார் என்பதறிந்து, அன்பால் மூடப்பட்டவனாய், இன்னதுதான் செய்கிறோமென்கிற நினைவு மின்றி, ஓரே ஒட்டமாக ஓடிவந்து "அடா! இராமா! என்கண்ணே! எப்போதடா திரும்பி வந்தாய்"என்று சொல்லி, ஓவென்று புலம்பியவண்ணம் அவரைத் தழுவிக் கொண்டான்.

ஸ்ரீராமபிரானும், அவனுடைய அசுத்தமான உடை முதலியவற்றையுங் கவனியாது, சிம்மாதனத்தினின்றும் இறங்கி, அவனை இறுகத் தழுவிக்கொண்டு தாமும் அழத் தொடங்கினார். இது அங்குள்ளார் எல்லோர்க்கும் பெருவியப்பைத்தரா நின்றது. கடைசியில் அந்த மனிதன் தன் அழுகையை நிறுத்தித் தன் அழுக்கு வஸ்திரத்தால் ஸ்ரீராமபிரானுடைய கண்களைத் துடைத்து, "அப்பா! அழாதே" என்று தேற்றும் வரையில் அவர் அழுதபடியே யிருந்தார். அழுது ஓய்ந்ததும் சபையைப்பார்த்து ஸ்ரீராமபிரான் "காலஞ்சென்ற எனது தந்தையை இன்று கண்டேன்" என்றார். எப்படி யெனில்'அடா'என்று தம்மை யழைப்பவர் தமது தந்தையைத்தவிர வேறெவருமிலர் என்பதை விளக்கிக்காட்டினார். பிறகு அந்த ஏழை மனிதனை அன்புடன் உபசரித்தார். இவ்வாறன்றோ நாம் சகோதரத்வம் பாராட்டவேண்டும். "காலத்துக் கேற்ற கோலம் என்கிறபடி நமது நாயகன் குகன் விஷயத்தில் பேரன்புகாட்டி நடந்தார். இராஜ கோலத்துடன் இருக்கும்போது குகன் போன்ற ஏழைகளை இப்படி ஆதரிப்பாரா? என்று சந்தேகங்கொண்டிருந்த பிராட்டியும் குகனிலும் இழிவான ஒருவன் திறத்தில் அவர் நடந்துகொண்ட தன்மையைக் கண்டு வெட்கி, ஆண் மகனாய்ப் பிறந்தவனுக்குப் பகவானுக்கிருக்குங் குணங்கள்போல * சுவாமித்வம், † சௌலப்பியம், ‡ சௌஸீல்யம், ¶ வாத்ஸல்லியம் என்கிற நான்கு குணங்களும் இருந்தாற்றான் அவன் பூரண மனிதனாய் உலகைத்தைச் சகோதர பாவனையில் நடத்த முடியும் என்று திருப்தியடைந்தாள்.

ஸ்ரீராமபிரான் தாம் சிநேகிக்க நேர்ந்தவர்களிடம் சகோதரத்வம் பாராட்டினார். அப்போது அவர்களிடம் தம்மை வேறுபடுத்திக்கொள்

---

* அரிய காரியத்தையும் செய்து முடிக்கும் ஆற்றல். † எல்லோரிடத்திலும் வித்தியாசமின்றிக் கலத்தல். ‡ சீலம் பாராட்டாமை. ¶ பசுவும் கன்றும்போ லிருத்தல்.

ளாது அவர்களைத் தமது இரத்தக்கலப்பினர்போலவே பாவித்து உள்ளன்போடு மெய்ம்மை விளங்க வார்த்தை யாடினர். துன்பம் நேர்ந்தபோது அவர்களுக்கு அந்த உரிமையோடு உதவுவதைச் செயலிலுங் காட்டினர். இதுபோலவே நாமும் நடக்க முயல்வோமாயின் நாம் பாராட்டும் சகோதரத்வமும் உண்மைச் சகோதரத்வமாகும். அது எவ்வித மனஸ்தாபத்திற்கும் இடந்தராமல் மனோற்சாகத்தை அபிவிர்த்தி செய்யும். இப்படி மனக்களிப்பிற்கு ஆதாரமான சகோதரத்வ பாவனையை நாம் கைப்பற்ற நமக்கு நல்ல ஞானத்தையும் மனோதிடத்தையும் கொடுத்தருளும்படி பகவானைப் பிரார்த்திப்போமாக. சுபம். சுபம்.

ம. இராஜகோபால பிள்ளை,
கோமளேசுவரன் பேட்டை.



யானைக்கால் வியாதியும், அதைத் தடுப்பதும்.

இவ்வசாத்திய வியாதிசம்பவம் நமது நாட்டில் விசேஷமாய் பரவி விட்டது. ஜனசமூகம் நிறைந்ததும் வடிகால் வசதியற்ற குளம் குட்டைகள் உள்ளதுமான சாக்கடை, மோரி, கக்கூஸ் முதலியவைகளுள்ள நகரங்களிலேயே இவ்வியாதி சம்பவம் விசேஷமாய் உண்டாகிறது.

நகரம் அருகாமை யல்லாத குக்கிராமங்களில் இவ்வியாதி சம்பவம் உண்டாகிறதில்லை. ஆகவே முற்காலத்திய வைத்திய சாஸ்திரங்களிலும் இவ்வியாதியின் நிதானம், சிகிச்சைகளையும் சிறிது விவரித்திருக்கினும், விசேஷ சம்பவம் இருந்ததில்லை என்றே தெரிகிறது.

மேல்கண்ட சாக்கடை, மோரி, முதலிய சுத்தமான கசமாலங்களில் ஜனிக்கும் விஷத்தன்மையுடைய கொசுக்கடி, மண் உணி, மண் அட்டை முதலிய கடி விஷங்களும் மேற் சொல்லிய கசமாலங்களின் துர்க்கந்தமான விஷக் காற்றுகளின் வழியாகவும் தேகத்தில் பரிசுத்த உதிரத்தில் மேல்படி விஷம் கலந்த கொடுமையால் முறிவுபெற்ற உதிர ஊன்கள் தேகத்தின் கீழ்நோக்கிய அங்கங்களான முன்கால், முன்கை, பீஜம், முதலியவற்றில் நாளடைவில் நாளங்களின் வழியே சென்று தங்குவதினால் சிறிது சிறிதாய் வீக்கமுற்று, அதைத்துப் பருத்து அவ்வுணர்ச்சி யற்ற ஊனிடையே, உணர்ச்சியற்ற ஓர்வித தசை வளர்ந்து பருத்து சுமைபோலாகி விடுகிறது.

இவ்வியாதி உற்பவிக்குமுன் உண்டாகும் குறிகளில் சிலவற்றை ஈண்டு கூறுவாம்.

மலபந்தம், இடுப்பில்வலி, துடையின் முன்பக்கமாய் கீழ்நோக்கி முழங்கால்வரை அல்லது சற்று கீழ்நோக்கியும் கடைக்காலிலும் மேற்சொல்லிய விஷ ஊன்கள் சுத்த இரத்த நரம்பில் கலந்து கீழ் நோக்கிப் போவதால் அவ்வகை நரம்பு தடித்து, கடுகடுத்துச் சகிக்கொணு வலி எடுக்கும்.

சிலருக்கு தொடையிலும், கெண்டைக்காலிலும் வேதனை எடுக்கும். அதினின்றுங் கணைக்காலில் சுளுக்குப்போன்ற வலியும் சிறிது வீக்கமும் உண்டாகும். சுளுக்கென்றும், வாயுவென்றும் பத்து முதலிய மேல் பூச்சு மருந்துகள் உபயோகிப்பார்கள். வலிமட்டும் சிறிது குறைந்தாலும், வீக்கம் மட்டும் குறைவதில்லை. சிலருக்குத் தொடைச்சந்தில் நெரி கட்டும். மேல்கண்ட விஷக் கொடுமையால் வாதபித்த ஐயங்கள் கோளாறடைந்து தாங்கொணாச் சுரம் உண்டாகி இரண்டொரு நாளில் குறைந்து விடும்.

அவ்வகைச் சுரம் சிலருக்கு அடிக்கடி உண்டாகும். சிலருக்குச் சுரம் உண்டாவதுமில்லை. இவ்வாதபித்தாசயங்கள் கோளாறடையும்படியான மேல்கண்ட விஷத்தன்மையாலும் பித்தாசயமும், மூளையும் விகல்பமடைந்து, பயித்தியம் அல்லது உன்மத்தரோகம் சம்பவித்துத் திரியும். சில படிப்பாளிகளான மேதாவிகளுங்கூட, நகரங்களில் நடமாடுவதை நாம் காண்கிறோம் இவையும் அக்கொடுமையால் விளைகிறதென்றே எண்ணப்படுகிறது. இவ்வியாதியஸ்தர்கள் ஆரம்பத்திலேயே சரியான சிகிச்சை செய்துகொள்ளாமல் கண்ணில் கண்ட இலை தழைகளை அவித்துக் காலில் கட்டுவதும், பத்துமுதலிய மேல்பூச்சு மருந்துகளை உபயோகித்து, குளிக்கப்போயும் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல் தேகத்தை சிலர் புண்படுத்திக்கொள்கிறார்கள். சாதாரண வாயுவென்றும், சுளுக்கென்றும் இவர்கள் மகிழ்ந்து செய்யும் பரிகாரங்களெல்லாம் வீண் பிரமையேயாகும்.

சிலர் காலில் கம்பளியைச் சுற்றிக்கொள்கிறார்கள். அதினாலொன்றும் சுகமில்லை மாசம் இரண்டு கஜம் நீளமான கம்பளிதான் தேவை.

இலகு விரேசன மருந்துகள் அடிக்கடி சாப்பிடலாம்.

தமிழ் முறையாகச் சரியான பக்குவமாகச் செய்த வல்லாதி மருந்துகள் சாப்பிடலாம். வான்மெழுகு அல்லது வாலை ரஸமெழுகை பத்தியமாயும், பத்தியமின்றி நீடித்தும் சாப்பிடலாம். யானைக்கால் தீர லேகியம் ஒன்று புலிப்பாணியர் வைத்திய நூலில் சொல்லியிருக்கிறது. அதைச் சரியான முறையாகவும் நம்பிக்கையாகவும் பலநாள் பொறுமையாயும் சாப்பிடலாம். 15-நாளைக்குமேல் குணம் காட்டும்.

தசாவதாரமாத்திரையும் சீந்தில் கொடி கஷாயமும் சுமார் 3-மாசத்துக்குக் குறையாமல் சாப்பிட்டு வந்தால் குணம் வரும். எல்லாம் நம்பிக்கையாயும் அவசரமன்னியில் பொறுமையுடன் சாப்பிட்டு வந்தால் குணம் காணலாம்.

கடுக்காயை பசு மூத்திரத்தில் ஊறவைத்து, உலர்த்தி இந்தப்படி இரண்டு மூன்று தடவை செய்து வைத்துக்கொண்டு, மாசத்தில் ஒரு நாள் அல்லது இரண்டுநாள் 1 கடுக்காயை $\frac{1}{4}$ சேர் பசுமூத்திரத்தில் அரைத்துக்

குழப்பி யருந்தலாம். (பத்தியம்) இந்தப்படி சிலநாள் செய்துவர குணம் உண்டாகும்.

தனியாக சீந்தில் கொடி கஷாயத்தில் மிளகு பொடி அல்லது அரிசி திப்பிலி பொடி சேர்த்து காலைதோறும் ¼ சேர் அளவு வீதம் சாப்பிட்டு வந்தால் மூன்று மாதத்தில் குணம் தெரியும். சுயானுபவம்.

G. கண்ணுசாமி பிள்ளை,
ஸ்ரீ ஷண்முகானந்த தர்ம வைத்தியாலயம், திருவாரூர்.

மாதர் நீதி மஞ்சரி.

முன்னுரை

பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்யாசம் என மக்களாவார் ஆசிரயித்திருக்கவேண்டிய நிலைகள் நான்கு. அவற்றுள், கிருகஸ்தாச்சிரமிகளே ஏனைய மூவரும் தங்கள் தங்கள் நிலைமையில் தவறாதிருக்க உதவுகின்றோராகலின், கிருகஸ்தாச்சிரமமே சாலச் சிறப்புடையதென்பது ஆன்றோர் கொள்கை. இதனை இல்லறமென்றும் இயம்பலாம். இல்லறமாவது, அன்புள்ள ஆடவனும் ஸ்திரீயும் விவாக மூலம் கணவனும் மனைவியுமாக இருந்து அறநெறிவழாது ஒழுகலேயாம்.

இரண்டு கண்களும் கூடியே ஒரு பொருளைப் பார்த்தல்போல, அவ்விருவரும் பரஸ்பரம் அன்பும் ஒற்றுமையுமுடையவர்களாய் இல்லிற்குரிய காரியங்களை நடத்தவேண்டும். அதற்குரிய விதிகள் பல. அங்ஙனம் தங்கள் கடமையை யறிந்து அந்நிலையில் நில்லாது தவறி, மாறுபட்ட மனமுடையவர்களாயின் அவ்வில்லறம் மிக்க துன்பத்தையே விளைக்கும். நிலை தவறின எப்பொருளும் இழிவடையுமன்றோ?

புருடர் வெளி வியவகாரஸ்தராயும், மாதர் வீட்டுக் காரியஸ்தராகவுமிருப்பதால், அம்மாதரே இல்லறநெறிக்குப் பெரும் பொறுப்பாளராயிருக்கின்றனர். இல், இல்லாள், மனை, மனைவி, மனையாட்டி, கிருஹிணி முதலிய பெயர்கள் அவர்களுக்கே சிறப்பாக அமைந்திருத்தலை ஆராயின், மாதர்கள் குடும்ப நிர்வாகத்தில் எவ்வளவு பொறுப்புள்ளவர்களாயிருக்கின்றனரென்பது இனிது விளங்கும். ஆகையால் மாதர் பொறுமை, அடக்கம், அன்பு முதலிய பொதுக் குணங்களையும், நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் நால்வகைச் சிறப்புக் குணங்களையும் பெற்றிருத்தல் அவசியம். அதற்கு அவர்கள் தங்கள் கடமைகளைச் செவ்வனே யுணரவேண்டும். ஆன்ற கல்வியும் அனுபவமுமின்றேல் அக்கடமைகளை யறிய வியலாது. எத்தொழிலாளருக்கும் தத்தம் தொழிலுக்கேற்ற கல்வியும் அனுபவமு மின்றியமையாதன. உதாரணமாக, ஓர் வைத்தியரை எடுத்துக்கொள்வோம். அவர் தம் தொழிலுக்கேற்ற சாஸ்திரங்களை நன்றாய்க் கற்கவேண்டியதோடு, பல்வேறிடங்களிலுள்ள வைத்திய சாஸ்திர நிபுணர்

கள் செய்துள்ள அரிய பெரிய காரியங்களை யெல்லாம் கிரந்தங்கள் வாயிலாக ஆராய்ந்து, இன்னின்னார் இன்னின்ன முறைகளைக் கையாண்டதால் இன்னின்ன பலன் பெற்றனர், இன்னின்ன முறைகளிற் றவறியதால் பயன் பெறாதொழிந்தனரென்று அறியவேண்டிய அனுபவத்தையும் அடைதலத்தியாவசியம்.

நம்து பெண்கள் கல்வியில் எவ்வித நிலைமையிலிருக்கின்றன ரென்பதைக் கூறவேண்டிய தில்லை. கொடுக்கப்படும் சிறிது கல்வியும் 'இல்லாதிருந்தால் நலமா யிருக்கும்' என்னலாம்படி யிருக்கிறது. இவ்வாறு பல வகைக் காரணங்களால் நமது மாதர் தங்கள் கடமைகளை யுணர்ந்து அந்நெறியில் நிற்கக்கூடாதவர்களாய் விட்டனர். கற்பு என்பதைக் காதிலும் கேட்டறிவதற்கில்லை. இது எத்துணை விசனிக்கத்தக்க விஷயம்.

ஆகையால், எனது சகோதரிகளின் நிமித்தம் இம் 'மாதர் நீதிமஞ்சரி' யின் வாயிலாக, அவர்களுடைய கடமைகளையும் பொறுப்புக்களையும் செவ்வையாக விளக்கிக்காட்டவேண்டுமென ஓர் விருப்ப மெமக்குள்ளுதித்ததாகலின் அதற்கிசைந்து இதை எழுதத் துணிந்தனம்.

அறிவினுக் கறிவாகி எமக்கு இவ் வெண்ணத்தைத் தந்து எழுதுந் திறமையும் சிறிதளித்த எல்லாம் வல்ல இறைவன் இதை இனி முடித் தருளுமாறும் இறைஞ்சுவோமாக.

'பலனை எதிர்பாராது செய்வது நம் கடமை. பலன் தருவது பராபரன் கடமை'

திரௌபதியும், சத்திய பாமையும்.

ஆண்டவனருளைப் பெற்ற பாண்டவர் தீண்டாத கற்புடைய திரௌபதியுடன் துரியோதனன் ஏற்பாட்டின்படி வனவாசஞ் செய்துகொண்டிருந்தார்கள். பதினொன்றும் வருஷம் காமிய வனத்தில் தங்கி யிருந்தனர். அப்போது ஸ்ரீகிருஷ்ணர் பகவான் அவர்களைப் பார்க்க விரும்பி, துவாரகையினின்றும் பிரயாணப்பட்டார். அதை யறிந்த சத்தியபாமை தானும் கூட வருவதாகக் கூறினாள். நல்லதென்று சுவாமியானவர் சத்தியபாமையை யழைத்துக்கொண்டு காமியவனம்போய் பாண்டவர்களைக் கண்டார். பகவானைக் கண்ட பாண்டவர்கள் எதிர் கொண்டுவந்து தெண்டனிட்டு அநேக உபசாரங்கள் செய்து அழைத்துப் போனார்கள். சத்தியபாமை திரௌபதியிடஞ் சென்றாள். திரௌபதியும் சத்தியபாமையை அன்புடன் தழுவி உட்காரவைத்து க்ஷேமலாபங்களை விசாரித்துக்கொண்டிருந்தாள். அப்போது சத்தியபாமை திரௌபதியைப் பார்த்து, "அம்மா! நான் உன்னை ஒன்று கேட்க விரும்புகிறேன். அதாவது,

"அண்ணி! இந்த உலகத்தில் ஒரு ஸ்திரீயானவள் தன் புருஷனைத் திருப்தி செய்வது மிகக் கஷ்டமாயிருக்கிறது. அவள் எவ்வளவுதான் நியத்தோடு நடந்துகொண்டாலும், அக்கணவன் அவளைக் கோபிக்

கிறான்; திட்டுகிறான்; அடிக்கிறான்; சில சமயங்களில் வீட்டை விட்டுத் துறத்தவும் பார்க்கிறான். 'ஐயோ என் விவாகம் செய்துகொண்டேன்!' என்று தன்னைத்தானே நொந்துகொள்ளுகிறான். பிறமாதர்களிடத்தில் ஆசை கொள்ளுகிறான். எல்லா வீடுகளிலும் இந்தக் கஷ்டமாகவே யிருக்கிறது. பூவும் மணமும்போல இருக்கவேண்டிய கணவனும் மனைவியும் நாயும் பூனையும்போல் இருக்கிறார்கள். வேறொன்றும் வேண்டாம். உன் அண்ணாவையே பார். அவரைத் திருப்திசெய்ய எவ்வளவோ பாடு படுகிறேன். முடியவில்லையே! இப்படி யிருக்க நீயோ ஐந்து கணவரை வைத்துக்கொண்டு எப்படி சமாளிக்கிறாயோ? மிக்க ஆச்சரியமா யிருக்கிறது. அவர்கள் உன் வார்த்தை மீறாமல் உன் சொற்படி நடந்தும், உன் மேல் மிக்க அன்புடையவர்களாகவு மிருக்கின்றார்களே. அப்படி யிருப்பதற்கு நீ அவர்களை எவ்வாறு வசப்படுத்துகிறாய்? ஏதாவது மருந்தின் வல்லமையா? மந்திர சக்தியா? வேறு தந்திர சாமர்த்தியமா? சொல்ல வேண்டும்'' என்று வினவினாள்.

திரௌபதி:—''அம்மா! சத்தியபாமா! நீ கேட்ட கேள்வி எனக்கு மிக்க அதிசயத்தை உண்டு பண்ணுகின்றது. நான் இதுவரையில் உனது விஷயத்தில் மிக்க கௌரவமான எண்ணங்கொண்டிருந்தேன். வேதங்களாலும் ரிஷிகளாலும் காணமுடியாத திருவடியை யுடைய தேவதேவனாகிய கண்ணபிரானையே கணவனாகப் பெற்றிருக்கும் உன் பாக்கியமே மிக்க சிலாக்கியமும் யோக்கியமுமென் றெண்ணி யிருந்தேன். நீ இவ்விதம் சொல்வது தகாது. மருந்தும் மந்திரமும் விரும்பினாய். அது தாசி வேசிகளுடைய தொழிலாம். தங்கள் நாயகருக்கு மருந்தும் மந்திரமும் தேடும் பெண்கள் மீளா நரகத்திற்கே ஆளாவார்கள். அதனாலவர்களடையும் பயன் சிறிதுமில்லை. நோயும் தரித்திரமும் அவர்களைப் பீடிக்கும். இவ்விதம் பலவகை உபாயங்களால் நாயகரை வசப்படுத்த நினைக்கும் நாரியர் மிக்க கேவலமான நாய்களினுந் தாழ்ந்தவராவர்.

அம்மா! என் கணவர் என்னிடம் அன்பா யிருப்பதற்குக் காரணம் கூறுகிறேன் கேட்பாயாக. நான் என் கணவர் ஐவரையும் சாமான்ய புருஷர்களாக நினைக்காமல் ஐந்து தெய்வங்களாக நினைத்திருக்கின்றேன். 'குற்றமற்ற மனைவிக்குத் தன் கணவன் சொல்லைமீறி நடவாதிருத்தலே சிறந்த தவமும் தேவபூஜையும்' என்று வேதவிதி யிருப்பதனாலே, நான் அதையே முக்கியமாகக் கொண்டிருக்கிறேன். ஆகையால் எனக்கு வேறு தெய்வமும் தவமும் நோன்பும் தீர்த்தமும் க்ஷேத்திரமும் இல்லை. இதுவே கற்பின் லக்ஷணமும். நான் இவ்வாறு, 'எல்லாம் அவர்களே. அவர்களை விட வேறில்லை' யென நினைத்துத் திரிகரண சுத்தியாய் அவர்களுக்கு வேண்டியவைகளைக் குறைவறச்செய்து வருகின்றமையால், அவர்களும் என்னிடம் மாறாத விசுவாசம் வைத்தும் அந்நியஸ்திரீகளை விரும்பாமலு மிருக்கின்றார்கள். ஒருவேளை அவர்கள் பிறமாதரை இச்சித்தாலும்

நானும் அவர்களுக்குச் சகாயமாயிருந்து, அந்த ஸ்திரீகளுக்கு மிக்க உபசாரத்துடன் ஆடை ஆபரணங்களைக் கொடுத்தனுப்பி மரியாதை செய்வேன். இப்படிச் செய்வதால் கணவர், மனைவியர்மீது மிக்க அன்பு வைப்பதுடன் தங்கள் குற்றத்தையு முணர்ந்து அத்தகைய தொழிலில் பிரவேசிக்கமாட்டார்களென்பது நிச்சயம். அப்படி திருந்தாவிட்டாலும் மனைவியர்மீதுள்ள பிரியம் நீங்காமலிருக்குமல்லவா? அதுதானே மனைவியர்க்குத் தேவை! (அதைவிட வேறென்னவேண்டும் என்பது கருத்து.) அப்படிக் கின்றி நாம் கோபித்துக்கொண்டு அவர்களுடன் பேசாமலும் உணவளித்தல் முதலிய உபசாரங்களைச் செய்யாமலு மிருப்போமானால் அவர்கள் நம்மேல் வெறுப்புக்கொண்டு தாசிகள் வீடே கதியாய் அவ்விடத்திலேயே தங்கி விடுவார்கள். அப்பொழுது நாம் செய்வதென்ன? அதனால் வரும் லாபமென்ன? ஒன்றுமில்லை. ஆகையால் நாம் அவ்வாறு செய்யலாகாது.

இன்னமுங்கேள் சத்தியபாமா! காலமறிந்து வேளையறிந்து சமயமறிந்து தக்க விதமாகப் போஜனம் உடை படுக்கை முதலியவற்றை யமைப்பேன். எத்தனை வேலைக்காரர்களும் எத்தனை சமயற்காரர்களும் இருந்தாலும், நானே நேரிலிருந்து பார்த்து என் கையாரப் படைத்து அவர்களைச் சாப்பிடும்படி செய்தால் மாத்திரம் என் மனம் திருப்தியடையும். நமக்கிருக்கும் அக்கரை வேலைக்காரர்களுக் கிருக்குமோ? இருக்காது.

தவிர, 'கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி' என்பதுபோல், அவர்களுடைய கோபம் சந்தோஷம் பொறுமை தயாளம் இவைகளின் குறிப்பறிந்து, எந்தெந்த சமயத்தில் எவ்வெவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமோ அப்படி யெல்லாம் நடந்துகொள்ளுவேன். அவர்கள் கொலுவிற்கோ, வேட்டைக்கோ, யுத்தத்திற்கோ, நகரி சோதனைக்கோ புறப்படும்போது அததற்கு வேண்டிய ஆடை அணிகளா லலங்கரித்து, ஆயுதங்கள் வாகனங்கள் முதலியவற்றைச் சித்தப்படுத்தி வைப்பேன். மாமன் மாமிகளைக் குலதெய்வங்களைப்போலப் பாவித்து வேண்டிய பணிவிடைகள் புரிவேன்.

நான் என் புருஷர்களிடத்தி லிருக்கும்பொழுது நல்ல ஆடை ஆபரணங்களா லலங்கரித்துக்கொண்டு, வாசனைத் திரவியங்கள் பூசிக்கொண்டு, நறுமலர் தரித்து மலர்ந்த முகத்துட னிருப்பேன். அவர்கள் வீட்டிலில்லாத காலங்களிலும் நான் வெளியேபோக நேரிடும் பொழுதிலும் சாமான்யமாக அலங்காரமின்றி நாலுபேரைப்போ லிருப்பேன். சத்தியபாமா! இது உனக்கு ஆச்சரியமாயிருக்கும். ஏனெனில் சாதாரணமாக அநேகம் பெண்கள் நாயகருடன் வீட்டிலிருக்கும்போது தலைவிரி கோலமாய் அழுக்கடைந்த பழைய வுடை உடுத்து விகாரமாகக் காணப்படுவார்கள். வெளியில் புறப்படும்போதோ இரவல் வாங்கியாவது சிங்காரித்துக் கொண்டு வெளிப்படுவார்கள். அலங்காரம் யாருக்காக? அன்னியருக்காகவா? அன்னிய புருடர்கள் நம்மைப் பார்க்கும்போது என்ன பேசிக்

கொள்வார்கள்? பரிகசிப்பார்கள்; அவமானமாகப் பேசுவார்கள். சிலர் நம் கற்பைக் கெடுக்கவும் முயல்வார்களன்றோ? அப்படி யில்லாமல் சாதாரணமாகப் புறப்பட்டால் யாருமே ஏறெடுத்துப் பார்க்கமாட்டார்களல்லவா? அது 'உடம்புக்குப் பால் குடிக்காமல் ஊருக்குக் குடிப்பது' போலல்லவோ ஆகும்.

சில சமயங்களில் என் கணவர்களிடம் சிநேகரைப்போல நடந்து கொள்வேன். மந்திரிகளைப்போல் நியாயங்களை எடுத்துச் சொல்லுவேன். சில சில சமயங்களில் வேலைக்காரர்களைப்போல் கடினமான வேலைகளைச் செய்வேன். வீட்டு வியவகாரங்களை அவர்கள் கவனியாதபடி எல்லாம் நானே, அவர்கள் செய்தால் எப்படி செய்வார்களோ அவ்வாறே செய்து முடிப்பேன். அதிகமாகச் சொல்லுவானேன். எந்தவிதம் நடந்தால் அவர்களுக்குச் சந்தோஷமும் சாந்தமும் சுகமும் இன்பமும் உண்டாகுமோ அவ்விதமெல்லாம் செய்வேன். இதுதானம்மா என் வசிய முறை."

சத்தியபாமை:—"அண்ணி! நான் இதுவரையில் இவ்விஷயம் தெரியாமல் தாறுமாறாய் நடந்துகொண்டதுமன்றி உன்னையும் சாதாரணமாக வெண்ணிக் கேட்டேன். என்னை மன்னிக்கவேண்டும்."

திரௌபதி:—"சத்தியபாமா! இனிமேல் நான் சொன்ன பிரகாரம் நீயும் நடந்துகொண்டால் அதனாலுண்டாகும் பலனை நீயே அறிந்து சந்தோஷித்து மறுமுறை என்னைப் பார்க்கும்பொழுது என்னிடமே சொல்லிக் கொண்டாடப் போகிறாய்."

சத்தியபாமை:—"அண்ணி! தவறாமல் செய்வேன். அதோ உன் அண்ணா பாண்டவரிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு புறப்படுகிறார். நானும் போகவேண்டும். விடைகொடு. போய் வரட்டுமா?

திரௌபதி:—"அம்மா! சுகமாய்ப் போய்வா." (தொடரும்.)

பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர்,
இராணிப்பேட்டை.

ஆரிய சித்தாந்தம்.

(குரு)

(266-ம் பக்கத் தொடர்ச்சி.)

பிறகு நமது பரதகண்டத்திற்குக் கஷ்டகாலம் கிட்டியது. ஒரு சாராரால் பிரமம் என்று புகழ்ந்து கொண்டாடப்பட்டகாலம் நிர்விசாரமாய்ச் சலனமற்று நிற்பினும், ஜீவாத்மாக்களுடைய கர்மத்தை யனுசரிக்கும் வியாதியை முன்னிட்டு மாறிக் காணப்படுவது அதனியல்பு. ஒரே தன்மையான ஒரு கூட்டத்தார்க்கும் ஒரு தேசத்தார்க்கும் நன்மையாகவும் ஏனையர்க்குத் தீமையாகவும் மாறிக் காணப்பட்டுப் பலனளிக்கு மியல்புள்ளது. ஆயினும் அது கர்மத்தைப்பொறுத்தே யாகின்றது. பரதகண்டவாசி

களுக்குத் தங்கள் குலாசார ஒழுக்கங்களில் அசிரத்தை யுண்டானதே யிந்த மாறுதலுக்கு முக்கிய காரணமாம். கர்மத்தில் அசிரத்தை யுண்டாகவே ஒழுக்கங்கள் பிறழ்ந்தன. அதனால் பலவகையான ஆசைகளுமுண்டாயின. இத்தருணத்தில் நாஸ்திகர்களும் சமண பௌத்தர்களும் பரவலாயினர். அவர்கள் உபதேசமே ஜனங்கள் மனதுக்கு இனிப்பாயிருந்தது. கலி பிறந்த மூவாயிர வருஷங்களுக்குப் பின்னரே இம்மாறுபாடுகள் தோன்றின.

பௌத்த மதத்தைச் சாக்கிய புத்தர் என்றவர் பரப்பினர். விஷ்ணுவே ஒரு காரணார்த்தமாகப் பௌத்தராக அவதரித்ததாகவும் சரித்திரமுண்டு. எவ்வாற்றானும் ஒரு காலத்தில் பௌத்தமதம் நம் நாட்டில் அதிகமாகப் பரவி யிருந்தது. இங்கிருந்தே சீனா, ஜப்பான், திபேத் முதலிய நாடுகளுக்குக் கொண்டுபோகப்பட்டது.

வைதிகமதம் தலை யெடுக்கும்போது இந்த மதங்கள் ஒடுங்கி மறைந்து கிடக்கும். வைதிக மதத்தில் சிரத்தை குறையும்போது இம்மதங்கள் பிரபலப்படும். இந்தப் புறமதங்களேயன்றி வைதிகமதமே பல பிரிவுகளாகப் பிரிந்தது. அவற்றுள் சைவம், வைணவம், சாக்தேயம், பாசுபதமென்பனப் பிரதானம். சைவ வைணவங்களே யிப்போது மிகுதியாகக் காணப்படுகின்றன. இவ்விதக் குழப்பங்களாலே வைதிகத்தில் எல்லாருக்கும் சிரத்தை குறைந்து வந்ததனால் குரு சிஷ்ய பரம்பரையும் மாறுபடத் தொடங்கியது. குருமார்களுக்கு வேறு மார்க்கமில்லாமையால் சிஷ்யர்களிடத்தில் பொருளை அபேட்சிக்கத் தொடங்கினார்கள். அதனால் சிஷ்யர்களைக் கண்டித்துச் சிக்ஷித்து நடத்த முடியாமற் போயிற்று. சிஷ்யர்களும் பணம் கொடுப்பதனாலே தம்மை யுயர்வாகவும் குருவைத் தாழ்வாகவுங் கருதத் தொடங்கினார்கள். அந்நிய நாட்டுப் புதிய நாகரிகமும் கலந்துகொள்ளவே குருவை யொரு வேலைக்காரனாகவும் தங்களை எஜமானர்களாகவும் மதித்துக் குருவின்மேல் அதிகாரம் செலுத்தவும் தொடங்கினார்கள். குருமார்களும் சிஷ்யர்களுக்குப் பயந்து அடங்கி நடக்கலானார்கள். மானத்துக்குப் பயந்த சில கல்விமான்கள் குருத்தொழிலை வெறுத்து ஜீவனத்தை யுத்தேசித்து வெவ்வேறு தொழில்களிற் பிரவேசித்துவிட்டார்கள். இக்காரணங்களால் நியாயமான கல்விபோதனை சீர் குலைந்தது. அந்நிய நாகரிகமே மேலாயிற்று. குரு சிஷ்யர்கள் என்கிற பேரே மறையக் குயுக்தியும் குதர்க்க வாதமும் மிகுந்தன. ஒரு குருவினிடத்தில் பாடங்கேட்பது மிகவுங் குறைவாகக் காணப்பட்டது.

தற்காலத்தில் அச்சுக்கூடம் அதிகப்படவே புஸ்தகங்களும் ஏராளமாகப் பிரசுரமாயின. அந்தப் புஸ்தகங்களே பேருக்குக் குருவாயின. குருவின் பேர் சொல்வார் எவரையும் காணோம். நானே படித்துக் கல்வியில் தேர்ச்சி யடைந்தே னென்பதே பெருமையாகக் கொள்ளப்பட்டது. ஒரு குருவினிடத்தில் படித்துத் தெரிந்துகொண்டேன் என்றால் அது பெருங்

குறைவென்று கருதப்படுகிறது. தானே படித்த கல்விமான்களே ஏராளமாகக் காணப்படுகின்றனர். குரு முன்னிலையில் ஓதித் தெளிந்தவர்கள் மிகவும் சொற்பமாகவே காணப்படுகிறார்கள். அவர்கள் பொருளீட்டுந் தொழிலிற் பிரவேசித்திருப்பதினால் கல்வி போதிக்க அவகாசமில்லை. இதனால் உண்மையான கல்வியும் உபதேசமும் ஒழிந்துபோயின.

ஆயினும் நெறி தவறாதவர்களும், பக்திமான்களும், வைதிக சம்பிரதாய முணர்ந்தவர்களும் முற்றும் ஒழிந்து போகவில்லை. நீறுபூத்த நெருப்பைப்போலக் காலக் கொடுமைக்கஞ்சி மறைந்திருக்கிறார்கள். அவர்களை யாராய்ந்து தெரிந்துகொண்டு அவர்களுக்குப் பணிவிடைசெய்து மெய்யான கல்வியையும் உண்மை ஞானத்தையும், தெய்வ மகிமையையும் உணர்ந்துகொள்வது அறிஞர் கடமையாம். இவ்வாறு உணர்ந்துகொண்டாலன்றி உண்மை ஞானம் விளங்காது.

சத்தியம், ஞானம், சந்தோஷம், வெறுப்பின்மை, கருணை, போதிப்பதில் ஆவல், இந்தக் குணமுடையவர்களே குருவாக அடைவதற் குரியார். இந்த ஆறு குணங்களும் ஈசுவரனுக்குரிய குணங்களாம். ஆதலால் தெய்வ பக்தியுள்ள உண்மை ஞானிகளுக்கு இக்குணங்கள் உரியவைகளாம். அகண்டமாய், ஏகமாய், சர்வ வியாபகமாய், சர்வஞானமாய், நித்தியமாய், மனோவாக்குகளுக் கெட்டாததாய், உண்மையான ஞானிகளின் அறிவில் அறிவுருவாக விளங்குவதான ஏகரச பரம்பொருளைப் பிறருக்குபதேசிப்பது சிற்றறிவினராகிய மனிதர்களாலியலாது. அந்தப் பரப்பிரமத்தோடு ஏகமாய்க் கலந்து நிற்கும் மெய்ஞ்ஞானிகளே யுபதேசிக்கும் வல்லமையுடையவராவார். அந்தக் குருவும் பரப்பிரம்மமும் வேறான பொருள்களாகா. ஆதலால் சிஷ்யர்கள் குருவைப் பரமாத்மாவாகவேகருதி வழிபடவேண்டும். குணங்குறி கடந்த அந்தப் பரம்பொருளே மனித உருவங் கொண்டு குருவாக எழுந்தருளும் என்று கொள்ளும் பட்சத்தாரும் பலர் உளர். இவர்கள் தமது குருவையன்றி மற்ற எதனையும் வணங்குவதில்லை.

இதில் உண்மையிது. பல கோடி ஜன்மங்களிற் செய்த பூஜா பலத்தால் பரசிவனிடத்தில் உண்மையான பக்தி யுண்டாகும். அந்தப் பக்தியின் முதிர்ச்சியால் ஞானம் கிட்டும். அந்த ஞானத்தில் நிலைபெற்று நிற்பவர் அந்த ஞானாக்கினியால் மல மாயா கன்மங்களைத் தகித்து விடுவர். அதனால் அவர்களது கரணங்கள் எல்லாம் சிவகரணங்க ளாய்விடும். அவர்களும் பிரமத்தில் ஒடுங்கி நிற்பதினால் பிரமமே யாய்விடுவார்கள். அத்தகைய பெரியோரது அனுக்கிரகத்தினாலாகாதது ஒன்றுமில்லை. அவர்கள் தமது கடாட்சவீட்சண்யத்தினாலும், ஹஸ்த ஸ்பரிசத்தினாலும் திருவடிகளை முடிமேல் சூட்டுதலாலும் தமது சிஷ்யர்களுடைய மலமாயா கன்மங்களை நசிப்பித்து, அஞ்ஞானாந்தகாரந் தொலையுமாறு மெய்ஞ்ஞானத்தைக் கொடுத்தருள்வராதலால் அவர்களுக்கும் பரமாத்மாவுக்கும் வேறுபாடு

கிடையாது. வேருகக் கருதுகிறவன் பிறவிக்கடலைக் கரைகாணமாட்டான். இதுபற்றியே குரு, லிங்கம், சங்கமம் என்று மூன்றுவித சொரூபங்களை நூல்கள் விதித்தன. இவற்றுள் மனித வடிவாய் நின்று உபதேசிப்பவர் குரு. பாணலிங்கம், விக்கிரக சொரூபம், இவையே லிங்கம் தேவனடியாரே சங்கமர். இம்மூன்று சொரூபங்களையும் வணங்கி ஞானம் பெற்று முத்திபெற்றவர் பலர். இவற்றுள் ஒவ்வொன்றைத் தனித்தனியே வணங்கி முத்தி பெற்றவர்கள் பலர். இவ்வாறு வழிபட்டு குரு பக்தியால் முக்தி பெற்றவர்களே நமது தேசத்திற் பிறந்த மகாத்மாக்கள்.

(தொடரும்.)

சீவானந்தசாகரயோகீஸ்வரர்.

சுக்குநீர் கியாழம்.

திருப்பூர் வி. மகாலிங்கம் அவர்கள் கேட்டுக்கொண்ட பிரகாரம் மறுபடியும் எழுதலாயிற்று.

சுக்கின்மேல் உள்ள தோலில் ஓர்வித விஷ சத்து இருப்பதினுல் தோல் சீவ வேண்டியது அவசியமா யிருக்கிறது அப்படி தோல் நீக்கிய சுக்குடன் பனைவெல்லமாவது அல்லது சர்க்கரையாவது சேர்த்து கியாழம் செய்தாவது அல்லது காப்பித்தூளைப்போல் தூள்செய்து வைத்துக்கொண்டு காப்பியைப் போலாவது உபயோகிக்கலாம். சோம்பல் உண்டாகும் காலத்தில் இந்த கியாழத்தை உபயோகித்தால் உடனே சோம்பலை நீக்குகிறது. சந்தோஷமில்லாத வேளைகளிலும், ஜலதோஷம் பற்றிய காலத்தும் தலை நோய் ஜுரம் உண்டாயிருக்கும் காலத்தும் இந்த சுக்குநீர் கியாழத்தை உபயோகிக்கலாம். இதனுல் அநேக நன்மைகளும் இருக்கிறது. இந்தக் கியாழத்தை ஸ்நானம்செய்தவுடனும் அல்லது தினப் பிரதியும் உபயோக்கலாம். இதனுல் ஜலதோஷம் ஜுரம் தொத்துவியாதி முதலியவைகள் அணுகவொட்டாமல் தடுக்கிறது. ஆதலால் இந்த சுக்குநீர் கியாழத்தை யாரும் உபயோகிக்க எதுவா யிருக்கிறது.

சுக்கு அறியாத கியாழமுண்டோ என்னும் வாக்கியம்போல் எல்லா கியாழத்திலும் சுக்கு முதல்காரணமாக இருப்பதினுல் இந்த சுக்குநீர் கியாழம் மேலானதாக எண்ணப்படுகிறது.

மு. சு. வீராசாமி செட்டியார்,
பலசரக்கு மளிகை, வீரக்கல், திண்டுக்கல் போஸ்டு.

பஞ்சாயத்து.

"பஞ்சாயத்து" என்ற பதம் "பஞ்ச" என்ற பதத்திலிருந்து வந்திருக்கின்றது. இது ஐந்துபேர் கூடியதோர் சபை எனப் பொருள்படும். ஓர் தெருவிலோ கிராமத்திலோ உள்ள மக்களின் சண்டை சச்சரவுக்களை

யும், குற்றங்களையும் விசாரித்துத் தண்டிக்கவோ அல்லது சீர்திருத்தவோ, இச்சபை ஏற்பட்டுள்ளது. இச்சபையின் கருத்து, அந்தக் கிராமத்திலுள்ள குற்றங்களைப் போக்கி நியாய பரிபாலனம் செய்வதேயாம்.

இத்தன்மைத்தாய பஞ்சாயத்தில் உரிமை வகிப்பதற்குக் கிராமத்திலுள்ளோர் செல்வமும், செல்வாக்கும், சத்தியமு முள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் தீர்ப்பிற்கு முழுதும் அடங்கி நடப்பர். கிராமத்தினுடைய முழுமையான பொருப்பும், இப்பஞ்சாயத்தாரிடத்து ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றமையினால், பஞ்சாயத்தார் மிகவும் நல்லறிவு, நல்லொழுக்கம், நடுவுநிலைமை, சாதிமதவேறுபாடின்மை, சட்டதிட்ட வுணர்ச்சி, பழிபாவங்கட்கு அஞ்சுதல், தெய்வபக்தி முதலிய நற்குணங்களுடையவரா யிருத்தல் அவசியம். தீர்ப்பு செய்வதில் கடவுளை முன்னிலையாக நிறுத்தி, இரு கட்சியாரின் வாக்குமூலங்களையும் தெளிவுறக்கேட்டு, பாரபட்சமின்றி, சீர்தூக்கித் தீர்ப்புச் செய்யவேண்டும். இத்தன்மையுள்ளாரே பஞ்சாயத்தின் அவயவிகளா யிருக்க அருகராவர். இன்றேல் சரியான நியாயம் கிடைக்காததால், கட்சியினர் ஏமாற்றமடைந்து மனம் நொந்து உதிர்க்குங் கண்ணீரானது இவரையும் இவருடைய சுற்றத்தாரையும் சுற்றி நாசஞ்செய்யும்.

பஞ்சாயத்தின் பொருளையும், பஞ்சாயத்தாரின் தன்மையையும் பற்றி விவரித்த பின்னர், பஞ்சாயத்தினால் நாம் எய்தும் பயன் யாவை என்பதைப்பற்றி இங்கு கவனிப்பாம். கிராமங்களில் ஆங்காங்கு பஞ்சாயத்துக்களிருப்பின் அவ்வக்கிராமங்களில் சண்டை சச்சரவுகளும், கெடுதிகளும், அநியாயங்களும் குறையும். அவைகள் குறையவே, அமைதியும், நன்மையும், ஒற்றுமையும் ஏற்படும். அவைகள் ஏற்படவே, சமாதானமும், நம்பிக்கையும், வாய்மையும் தினகரனைப்போல் ஒளிவிட்டு விளங்கும். இவ்வாறின்றி நாம் தற்காலத்து நவீன நாகரீகமென்று சொல்லப்படுகின்ற அநாகரீகத்தில் தட்டுத்தடுமாறிப் பஞ்சாயத்துகள் ஏற்படுத்தாமல் நம் வழக்குகளைத் தற்காலத்து ஆங்கில நியாய சபைகளுக்குக் கொண்டுபோவதினால் நாம் மிகவும் கெடுதல்களை யடைகின்றோம். முதலாவது அதிக பணத்தை விரையம் செய்யவேண்டி யிருக்கிறது. அவ்வளவு செல்வத்தைச் செலவிட்டாலும், வழக்கறிஞர்களது (வக்கீல்கள்) வீடுகளிற்போய், அவர்களுடைய சௌகரியத்தைப் பார்த்துக்கொண்டு அடிமைபோலிருக்கவேண்டி யிருக்கிறது. ஐயகோ! இதென்ன விபரீதம்! நம் கண்ணுக்கு முன்னால் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் இவை யாவும் தெரிந்திருந்தும் அவ்வாறு செய்வது நம் அறியாத்தன்மையாகும். தொன்மை நாகரீகம் படைத்த நம் இந்தியர் இப்பொழுது இவ்வித இழிதொழிலும் செய்வரோ! செலவு செய்தபோதிலும் நியாயமான தீர்ப்பு கிடைக்குமென்ற நிச்சயமில்லை. எனவே நமக்கும் நம் தாயத்தாருக்கும் அப்பணம் சேராமல், அந்நியர்களால் அடித்துக்கொண்டு போகப்படுகிறது.

மற்றும், நம் வழக்குகளை அந்நியரிடத்துக் கொண்டுபோவதால், அவர்கள் நம்மை மிகவும் இழிவாகவும், ஒற்றுமை யற்றவர்களென்றும் நினைப்பதற் கிடமாகிறது. இவ்விதமாக நாமே நம்மைக் கெடுத்துக் கொள்ளலாகுமோ? இது நமது அறியாமையே யாகும்.

தி. போ. மாணிக்கவாசகம், வரகநேரி.

குறிப்பு:—பூர்வீகத்திலிருந்து நம்நாட்டில் எல்லா விஷயங்களும் பஞ்சாயத்தாராலேயே நடைபெற்று வந்தது. நாட்டாண்மைக்காரர் என்பவர் அந்தப் பஞ்சாயத்து சபையில் தலைமை ஸ்தானத்தை வகிப்பர். கிராமங்களில் ஒரு கிராமத்திற்கு ஒரு பஞ்சாயத்து சபை யிருக்கும். நகரங்களில் வீதி அல்லது பேட்டைக்கு ஒரு பஞ்சாயத்துச் சபை யிருக்கும். பெருத்த விவகாரமா யிருந்தால் ஐந்து பேருக்குமேல், அங்குள்ளவர்களில் முதன்மையான இன்னும் சிலரும் சபையில் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள்.

நம் நாட்டார் சேர்ந்த அத்தகைய சபைகள் ஆங்காங்கு இருப்பதால் நமக்கு அனேக நன்மைகளுண்டு. அவற்றில் முக்கியமானவைகளை மீண்டு கூறுகிறோம்:—

1-வது — ஆங்கில நீதிச் சபைக்குச் செல்வதால் நேரிடும் பணச் செலவு இங்கில்லை. அங்கு சுத்த ஏழைக்கு நியாயம் பெற வழியே யில்லை. ஒரு ஏழையை யொருவன் அக்கிரமமாக அடித்துக் காதை யறுத்து விட்டான் என்று வைத்துக்கொள்வோம். அவன் பிராது கொடுக்கவே பணம் வேண்டும். அதற்குமேல் ஒரு நியாயவாதி (வக்கீல்) க்குப்பணம் கொடுத்து அமர்த்திக்கொள்ள வேண்டும்.

2-வது — இதற்குள்ளாகவே இரண்டொருதினங்கள் கழிந்துவிடும். பிராது தாக்கல் செய்தபின், நீதவான் விசாரணைக்கு நாள் குறிப்பார். அது 10 அல்லது 15 நாட்கள் கழிந்தபின்பாககூட விருக்கும். விசாரணை தொடங்கிய பின்பும் ஒரு நாளையில் விவகாரம் முடியாது. இதனால் தீர்ப்பு கூறுவதற்குள் பல நாட்கள் கழியும்.

இந்த ஆலசியத்தால் பிராதிக்கு வீண் செலவுகள் பல நேரிடும்.

3-வது மேற்கண்ட ஆலசியத்தால் வேறொரு பெருங்கெடுதியு மிருக்கிறது. அதாவது குற்றம் செய்தவன் சாட்சிகளைத் தன் வசப்படுத்திக் கொள்ளப் பூரண அவகாசமிருக்கிறது.

பிராதியின் வக்கீல் "சரியான சாக்ஷி ஒருவராவது வேண்டுமே. உனக்கு வேண்டியவர்கள் யாரேனுமிருந்தால் கொண்டுவா, நான் தயார் செய்து விடுகிறேன்" என்று கூறினால் அப்படியும் செய்யவேண்டியதே. ஆனால் இச்சாட்சி பொய்ச் சாட்சி யாதலால் குற்றவாளியின் வக்கீலுடைய குறுக்குக் கேள்விகளால் பயனற்றதாய்விடும்.

4-வது நியாயாதிபதிக்கு பிராதியாவது குற்றவாளியாவது சாட்சிகளாவது ஒருவரும் தெரியாது. வக்கீல்களோ தங்கள் தங்கள் கட்சிக்கு அநுகூலமாவதைமட்டுமே கருதி மனச்சாக்ஷி கூறுவதை யடியோடு தள்ளிவிட்டு மெய்யைப் பொய்யென்றும், பொய்யை மெய்யென்றும் நியாயாதிபதிக்கு நிரூபித்துக்காட்ட முயல்வார்கள். நியாயாதிபதி யென்ன செய்வார்? சட்டத்தைமட்டும் கவனித்து தம் மனதிற்குக் குற்றம் நடந்தது உண்மையே யென்று தெரிந்திருந்தாலும், "சரியான ருசுவில்லாததால் குற்றவாளியை விடுதலை செய்துவிட்டேன்" என்று தீர்ப்பளித்து விடுவார்

பிரத்தியட்சத்தில் பிராதியின்காது அறுபட்டிருக்கிறதே, இக்குற்றவாளி நிரபராதியாயின் வேறு யார் இந்த அக்கிரமச் செய்கையைச் செய்தது? அந்த ஆளைக் கண்டுபிடித்து தண்டிக்கவேண்டுமல்லவா? அதைப் பற்றிக் கேட்க ஆங்கில நீதியில் வழியில்லை.

நம் நாட்டுப் பஞ்சாயத்தார் முன் இக்குற்றச்சாட்டு கொண்டுவரப்பட்டால் மேற்கண்ட தொல்லைகளெல்லாம் நடைபெற மார்க்கமில்லை. பிராதிக்கும் குற்றவாளிக்கும் செலவேயில்லை. பிரயாணச் செலவாவது படிச் செலவாவது இல்லை. பிராதி வாயால் நடந்ததைக் கூறவேண்டியதே. அன்றே அல்லது மறுநாளே, கூடிய சீக்கிரத்தில், அதில் சம்பந்தப்பட்ட அனைவரும் பஞ்சாயத்தார் முன் வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்கள். பஞ்சாயத்தார்களுக்கு அவர்களனைவரும் நன்றாகத் தெரியுமாதலால் அவர்கள் முன் பிராதியேனும், குற்றவாளி, சாட்சிகளேனும் பொய் கூறித் தப்ப முடியாது. சாட்சிகளைக் கெடுக்கவோ சமயமுமிராது. அப்படி இரகசியமாகச் செய்யவும் முடியாது.

இத்தகைய அனுகூலமான சந்தர்ப்பங்களால் தவறாது நியாயம் கிடைக்கும். இந்த உண்மையை யலக்ஷியம்செய்து நம்மவர் நீதிச்சபைகளுக்குப் பன்முறைசென்று அவதிப்பட்டுப் பணத்தை வீணுக்கிறைத்து நாட்டில் வறுமை யதிகரிக்கசசெய்வது நமது குற்றமேயாகும். இனியேனும் எச்சரிக்கை யடைந்து தங்கள் தங்கள் எல்லைக்குள் பஞ்சாயத்துச சபைகளை யேற்படுத்திக்கொள்ள ஆண்டவன் அருள் புரிவாராக.

பத்திரிகாசிரியர்.

விஷயதானம் புரிவோர்க்கு ஓர் அறிவிப்பு.

1. விஷயதானம் புரிவோர் ஒரு நல்ல விஷயத்தைப் பலரும் வாசித்துணர்ந்து பயனடையவேண்டுமென்ற நோக்கங்கொண்டே அவ்வாறு செய்கிறார்கள். ஆயினும், சிலர் தாம் வியாசம் வரையும் சக்தியுடைய அவ்வளவு கல்விமான் என்று பலரும் அறியவேண்டுமென்ற நோக்கங் கொண்டு அப்படிச் செய்வோரு முண்டு. அதாவது தமது பெயரால்

ஒரு வியாசம் வெளிவரின் அது ஒரு கௌரவமென வெண்ணுகிறார்கள். உண்மையான கல்வி யறிவுடையோர் கௌரவத்தையும் பெருமையையும் மதியார்கள் என்பது தெரிந்த விஷயமே.

2. தமது பத்திரிகைக்குச் சமயோசிதப்படி யுக்தமாகத் தோன்றும் வியாசங்களையே ஒரு பத்திரிகாசிரியர் தமது பத்திரிகையில் பிரசுரம் செய்வார். நாமும் அம்முறைப்படியே கூடியவரையில் நமது சஞ்சிகையில் வெளியிட்டு வருகிறோம்.

ஒரு வியாசத்தைப் பிரசுரிக்காமல் விடுப்பதற்குப் பலகாரணங்களுண்டு. அவற்றில் சிலவற்றை யீண்டு கூறுகிறோம்.

(அ) பத்திரிகையின் கொள்கைக்கு மாறான கொள்கை யடங்கியதா யிருத்தல்.

(ஆ) ஒரு வகுப்பார், ஒரு ஜாதியார் முதலியவர்களின் மனதைப் புண்படுத்தும் விஷயமடங்கியதா யிருத்தல்.

(இ) சமீபத்தில் வெளிவந்த விஷயமாகவே யிருத்தல்.

(ஈ) பயனற்ற அனுவசியமான சாமாசாரமா யிருத்தல்.

(உ) வீண் வாதத்தை கிளப்பக்கூடியதா யிருத்தல்.

(ஊ) அனாவசியமான கண்டனம் அல்லது மறுப்பு.

(எ) பாஷாஞானம் சற்றுமின்றி வரையப்பட்டிருத்தல்.

(ஏ) வாசிப்போர் மனதிற்கு விளங்காததா யிருத்தல்.

(ஐ) சத்தில்லாத வீண்கதையா யிருத்தல்.

(ஒ) ஒரு இடத்தில் நடந்ததும், பலர் மனதையும் கவரக்கூடாததுமான விஷயமாயிருத்தல்.

(க) கடிதத்தின் இரண்டு பக்கங்களிலும் வரைந்திருப்பது அல்லது விளங்காதபடி குறுக்கியோ கிறுக்கியோ வெழுதி யிருப்பது.

(ங) எழுதியனுப்புவோரின் பெயர் விலாசம் குறிக்கப்படாதிருத்தல்.

இத்தகைய பல காரணங்களிருப்பதால் பத்திரிகாசிரியர்கள் ஒரு வியாசத்தை வெளியிடாததற்குக் காரணம் கூறுவதில்லை. இதைப்பற்றி சஞ்சிகையில் முன்னமே யறிவித்திருக்கிறோம்.

அப்படி யிருந்தும் சிலர் "நான் அனுப்பிய விஷயத்தை வெளியிடாததற்குக்காரணம் தெரிவிக்கவேண்டும்" என்று பன்முறை எழுதுகிறார்கள். சிலர் "நான் எவ்வளவோ கஷ்டபபட்டு எழுதி யனுப்பி யிருக்க அதை வெளியிடாதிருப்பது ஒழுங்கல்ல" என்றும், "என் வியாசம் அவ்வளவு குறைந்து விட்டதா, நீங்கள் பிரசுரிக்கும் மற்ற வியாசங்களெல்லாம் மட்டும் உயர்ந்தவைகளா" என்றும், "என் வியாசத்தைப் பிரசுரிக்காவிட்டால் நானும் என் நண்பர்களும் சஞ்சிகை வரவழைப்பதை நிறுத்தி விடுவோம்" என்றும், பலவாறு வரைகிறார்கள்.

இப்போது நாம் முடிவாகக் கூறுவதாவது:—

1. ஒரு வியாசம் பிரசுரிக்கப்படுவது அந்த வியாசத்தின் தகுதியையும் சமயோசிதத்தையும் கருதியேயன்றி மற்ற எக்காரணத்தையும் உத்தேசித்தல்லவென்பதை விஷயதானம் புரியும் நண்பர்கள் நன்கறியவேண்டும்.

2. ஒரு வியாசம் வெளியிடாததற்குக் காரணம் அறிவிக்கப்படமாட்டாது.

3. வியாசம் அனுப்பும்போதே "இதைப் பிரசுரிக்காவிடின் திருப்பியனுப்பவேண்டும்" என்று அறிவிக்கப்பட்டால் மட்டுமே அந்த வியாசம் திருப்பி யனுப்பப்படும். திருப்பியனுப்பத் தபால்பில்லைகளனுப்பவேண்டும். மற்றபடி வெளியிடப்படாத வியாசங்கள் திருப்பியனுப்பப்படமாட்டா.

பத்திரிகாசிரியர்.



தனித்தமிழ்ப் பாதுகாப்பு.

தங்கள் அருமையான "ஆனந்தனில்" சென்ற கார்த்திகை மாத சஞ்சிகை 175-ம் பக்கத்தில், மேல் குறிப்பிட்ட வியாசத்தை வாசித்துப் பார்க்க நான் மிக களிப்புக்கொண்டேன். அதை யெழுதிய நாகை நீலாம்பிகை அம்மையாரும் கூடுமானவரையில் வடமொழிகளில்லாமலும் தமிழ்ச்சொற்களையே வழங்கி இருந்தாலும் "இலக்கணம்," "தெய்வம்" "காலம்," போன்ற சில ஆரிய மொழிகளை முழுதும் விலக்க முடியவில்லை போலும்! மேலும் தெலுங்கு பாஷை வடமொழி கலப்பில்லாமல் தனியே இருக்க முடியாதென்றும், தமிழிற்குத்தான் அப்படி முடியுமென்றும் வற்புறுத்தி இருக்கிறது. ஆனால் தெலுங்கு பாஷையும் நமது தமிழைப்போலவே தனித்திருக்க முடியுமாகையால்தான் அம்மாதிரிச் சில "சுத்த ஆந்திர" செய்யுள்களுமுண்டு. நிற்க வடமொழியைத் தெய்வ பாஷை யென்று சொல்லியது பொருந்தாவிட்டால், "தெய்வத்தமிழ்" என்று அம்மையாரே கூறுவதெப்படி? அம்மையார் சமஸ்கிருத பாஷையை "ஓசை இனிமை இல்லாதது" என்று சொன்னால் அதனால் தமிழுக்கு என்ன இனிமை அதிகமாக வந்துவிடும்? ஆரியர்கள் தமிழ்ச் சொற்களைக் கலந்து கொண்டே வந்தார்களென்று நம் அம்மையார் அபிப்ராயப்பட்டாலும் அம்மாதிரிச் சில மொழிகளேனும் அத்தாட்சியாக வெடுத்துக் காட்டி இருந்தால் நன்றாய் இருக்குமல்லவா? ஆனால் சாதாரணமாய் பார்க்கில் ஆரியம் கலப்பில்லாமல் தமிழ் எழுதுவதும் மிகவும் கடினம்தான். ஔவையார் அருளிச்செய்த 109 ஆத்திசூடி நீதிவாக்கியங்களில் சுமார் 20 வாக்கியங்களில் ஆரிய பதங்கள் கலக்கப்பட்டிருக்கின்றன. அம்மாதிரியே 91 கொன்றைவேந்தன் அடிகளிலும் ஏறத்தாழ 33 அடிகளில் வடமொழிகள் வந்துள.

திருவள்ளுவர் செய்த திருக்குறளிலும் வேண்டியவரையில் ஆரியம் கலக்கப்பட்டிருக்கிறது. முதல்குறளிலேயே, "ஆதி," "பகவன்," "உலகு," என்னும் மூன்று வடமொழிச்சொற்கள் வந்திருக்கின்றன வல்லவா! ஆனால் சமஸ்கிருதம் கலப்பில்லாமலே சில தமிழ் நூல்கள் இல்லையென்று நான் சொல்ல வரவில்லை. ஆனால் அப்படியேதான் சில தெலுங்கு கிரந்தங்களும் வடமொழிகள் நீங்கலாகத் தனித்திருக்கிற தென்பதை நான் ஈண்டு வற்புறுத்துகிறேன். சென்னை தினசரி "ஹிந்து" என்னும் ஆங்கில பத்திரிக்கையில் சில பண்டிதர்கள் ஆரிய திராவிட சண்டையை நடத்திக்கொண் டிருப்பதை நான் படித்து மிக நொந்தேன். காலம் சென்ற ஸ்ரீமான் சுவாமி விவேகானந்தரும் அம்மாதிரியே ஆரிய திராவிட விவாதம் குழந்தைகள் சண்டைபோல் அறியாமையால்தான் நடைபெறு மென்றார்! ஆகையால் நாம்எல்லோரும் சமமாகவும் சகோதரபாவத்துடனும் ஒன்றை உயர்த்தாமலும் மற்றொன்றைத்தாழ்த்தாமலும் அவரவர்களுடைய தாய்ப் பாஷைகளை அவரவர்கள் பயிற்சிசெய்ய முயலவேண்டு மென்பது தான், ஆனந்தனுடைய நண்பர்களுக்கு, என்னுடைய வேண்டுகோள்.

வா. உ. துரைசாமி ஐயர், வாலாஜாபேட்டை.

குறிப்பு:—தமிழ் ஒரு பூரண பாஷை யென்பதும், அன்னிய பாஷைக் கலப்பில்லாமலே நடை பெறக்கூடியதென்பதும் மறுக்கொணா விஷயங்களே. அவ்வாறே காலக்கிரமத்தில் ஆரியமொழிகள் பல கலந்துபோய் அவற்றிற்குரிய தமிழ் மொழிகள் வழங்கப்படாமற் போனமையின் இப்போது ஆரியக் கலப்பில்லாமல் தனித்தமிழ் எழுதுவது மிகவும் கடினமே என்பது பிரத்தியட்ச அனுபவத்தாலேயே தெரிகிறது. தமிழில் ஆரியம் கலந்திருப்பது போலவே, மகம்மதியர் அரசாண்ட காலத்தில் அனேகம் உர்து, ஹிந்துஸ்தானி மொழிகளும் கலந்துகொண் டிருக்கின்றன. ஜாகீர், ஹுஸுர், இலாகா, கலால், ரஸ்தா, கிஸ்தி, கஜானா, பசலி, ஜாமீன், தாசில், வக்கீல் முதலியவற்றைத் திருட்டாந்தமாகக் கூறலாம். இப்போது, கலக்டர், இன்ஸ்பெக்டர், வாரன்ட், ஸம்மன், டிக்ரீ முதலிய ஆங்கில மொழிகள் சாதாரணமாக வழங்கப்படுகின்றன. தமிழ் இராஜ பாஷையா யில்லாத தாலேயே இப்படி நேர்கின்றது.

ஆனால் கூடியவரையில் அன்னிய மொழிக் கலப்பில்லாமலே தமிழை நடைபெறச்செய்ய முயல்வதே நமது கடமையும் சிறப்புமாகும். தமிழ் ஆரியம் இவை யிரண்டற்கும் பரமசிவமே ஆசிரியர் என்று கூறப்பட்டவரையில் இரண்டும் தெய்வீக மொழிகளென்றே நாம் மதிக்கவேண்டுமென்றி இவற்றில் உயர்வு தாழ்வு கற்பிப்பது பரமசிவத்தையே குறை கூறியதாகு மென்பதே நமது கருத்து. இத்தகைய வாதத்தை யடியோடொழித்துத் தமிழை யாதரித்து அதைப் பூர்வீக நிலைமைக்குக் கொண்டுவர முயல்வதே சிறந்த செய்கையாகும். பத்திரிகாசிரியர்.

பகவத்கீதை வசனம்.

(271-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஏ பார்த்த! எல்லார்க்கும் சுவர்க்காதிபலன்களா யிருப்பவன் நானே. இருவினை வழியே யாவரையும் போஷிப்பவனும், யாவர்க்கும் துக்க நிவர்த்தி யுண்டாக்குபவனும், யாவர்க்கும் பிரதிபலன் கோராமல் உபகாரம் செய்பவனும், எல்லாப் பொருள்கட்கும் காரணமா யிருப்பவனும் நானே.

பூமியின்கண்ணுள்ள நீரை இரவியாய் நின்று ஆக்ருஷணம் செய்கின்றவனும், மீண்டும் அதை மழையாக வருஷிக்கிறவனும் நானே. யார் எந்தத் தெய்வத்தைப் பூசித்தாலும் அவர்கள் என்னையே பூசிக்கிறார்கள். கர்மவயத்தராகிய மாந்தர் ஞான சொரூபியாய் ஏகமாய் உள்ள என்னையே (பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், அக்னி, ஆதித்தன் முதலிய) நானா ரூபங்களாகப்பாவித்து யாகாதிகளால் பூசிக்கிறார்கள். அத்தகையோர் சுவர்க்க லோகமடைந்து அங்குள்ள போகங்களைப் புசித்து, மறுபடி இம்மண்ணுலகில் ஜனித்து, இவ்வாறே இச்சையினால் மீண்டும் மீண்டும் பிறப்பதும் இறப்பதுமாய் அலைவர்.

[புண்ணிய கர்மங்களையும்; யாகாதி யக்ஞங்களையும் செய்வோர் மேலுலக போகங்களால் அப்புண்ணிய கர்மபலன்களை யனுபவித்து மீண்டும் பிறப்பிறப்பை யடைவர் என்று பகவான் கூறியது சகாய புருடர்களைப்பற்றியே. அதாவது இச்சையோடு, பிரதிபலனை யெதிர்பார்த்துக் கருமங்களைச் செய்வோர்களைப்பற்றியே. இச்சையே பிறவிக்குக் காரணம். மனம் இச்சா சொரூபமே.]

இப்போது பகவான் தத்துவஞானிகளாகிய நிஷ்காம புருஷரைப் பற்றி அருளிச்செய்கின்றார்.

ஒளி பொருந்திய வேலாயுதத்தை யேந்திய அர்ச்சுனா! என்னையே அநந்நியமாய்ச் சாக்ஷாத்கரித்துச் சதா சிந்திக்கும் துறவிகள் வேண்டிய யாவற்றையும் நானே உடனுக்குடன் கொடுத்து இரட்சிப்பேன்.

எல்லார் வேண்டியவற்றையும் பகவானே யளிப்பவராயிருக்க ஈண்டு ஞானிகள் வேண்டுவனவற்றைப்பற்றி மட்டும் விசேஷித்துக் கூறுவதென்னை யெனின், மற்றப் பிராணிகள் வேண்டியவற்றிற்கு முன்னே பிரயத்தனத்தை யுண்டுபண்ணி அப்பிரயத்தன வாயிலாய் அளித்து இரக்ஷிக்கிறார். ஞானிக்கு வேண்டியவற்றைப் பிரயத்தனமின்றியே யளிக்கிறார். அதனாலே உடனுக்குடன் அளிக்கிறார் என்று கூறப்பட்டது.)

அர்ச்சுனன்:—பகவான்! தாங்கள் அருளியவற்றால் இந்திரன் முதலிய அநந்நிய தேவதைகளும் உமது சொரூபமேயாகும். ஆதலின் அத்தேவதைகளை யுபாசிப்போர் உம்மையே யுபாசித்தவராவர். அவ்வாறிருக்க

அவர்களெல்லாம் மீண்டும் பிறப்பிறப்பை யடைவரென்பதும், தங்கள் பக்தர்கள் மட்டும் பிறவி யடையார் என்பதும் எவ்வாறு பொருத்தமாகும்?

ஏ பார்த்த! இந்திரன் முதலிய தேவர்களை வணங்குவோர் உண்மையில் என்னையே வணங்குகிறார்கள். ஆயினும் அவர்கள், அந்த தேவதைகள் எனது சொரூபமே என்பதை அறியாத அஞ்ஞானத்தோடு பொருந்தியிருந்தே அப்படி வணங்குகிறார்கள். ஆதலின், மீண்டும் ஜனிக்கிறார்கள்.

(ஞானியோ எல்லாம் என்னுடைய சொரூபமே யென்றும், என்னையன்றி வேறொன்றுமில்லை யென்றும் அறிவதாகிய ஞானத்தோடு என்னை வணங்குகிறானாதலின் பிறவியில்லாத நித்தியானந்தப் பேற்றை யடைகிறான்.)

(இந்திராதி தேவர்களைப் பூசிப்போர் பிறப்பிறப்பற்ற உயர் பதவியை யடையாரெனினும், அந்தந்த தேவதையின் ஆராதனைக்குரிய அற்பபயனை அவசியம் அடைவார்களென்றும், நேரே தம்மையே பூசிப்போருக்குரிய விசேடணத்தையும் அருளிச் செய்கின்றார்.)

இந்திரன் முதலிய தேவர்களை யாராதிப்போர் அத்தேவர்களே யாவார்கள். பிதிர்க்களை யாராதிப்போர் அப்பிதிர்க்களே யாவார்கள். யார் எந்தப் பூதங்களிடத்து அன்புவைத்து ஆராதிக்கிறார்களோ அவர்கள் அப்பூதங்களே யாவார்களெனின், என்னை யாராதிப்போர் நானே யாவார்களென்பதில் ஐயமுண்டோ? இல்லை.

(இப்போது பகவான் தனது பக்தர் அழியாத பலனை யடைவர் என்பதை யருளிச்செய்து, தமது ஆராதனம் கஷ்டமின்றென்பதையும் அதன் பிரகாரத்தையும் யருளிச் செய்கிறார்.)

ஏ பார்த்த! பத்திரம், புஷ்பம், பழம் முதலிய சுலபமாய்க் கிடைக்கத்தக்கவற்றைக்கொண்டு உள்ளன்போடு அநந்நிய பக்தியால் என்னை யாராதிக்கும் பரிசுத்த உள்ளமுடைய அன்பர்கள் எனக்கு அர்ப்பணம் செய்ததையே நான் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்வேன். ஆதலின் ஈவன, நோற்பன, உண்பனவாகிய, இவற்றையெல்லாம் அன்போடு எனக்கு அர்ப்பணம் செய்தால் பிரம்ம சொரூபியான என்னையே அடையலாகும்.

(இந்திராதி தேவதைகளை யாராதிப்பதிலும் யாகாதி எக்ஞங்களைச் செய்வதிலும், மிகு திரவியச் செலவும், தேகப்பிரயாசமும் உண்டு. ஈசுவரனை யாராதிப்பதற்கு மெய்யான பக்தி யொன்றே போதும். ஆதலின் தம்மைப் பூசிப்பதின் சுலபத்தைப் பகவான் அருளிச்செய்தார்.)

(பகவானே! உமது பக்தர்க்கு அநுக்கிரகம் செய்து மற்றையர்க்குச் செய்யாததால் தம்மிடம் இராகத்துவேஷாதிகளிருப்பதாகவன்றோ எண்ணவேண்டுமென்ற அர்ச்சுனன் சங்கைக்குப் பகவான் அருளிச் செய்கின்றார்.)

ஏ பார்த்த! ஈசுவரனாகிய நான் எல்லாப் பிராணிகளிடத்தும் சமானமாகவே யிருப்பவனாதலின், எனக்கு யாவரும் சமானர்களே யன்றி இன்னவர் பிரியமானவர், இன்னவர் பிரியமில்லாதவர் என்ற வித்தியாசமில்லை. ஆயினும் எவன் என்னை இவ்வாறறிந்து, சர்வ கர்மபலன்களையும் எனக்கே அர்ப்பணம்செய்து என்னிடம் அநந்நியபக்தி செலுத்துகிறானோ அவன் என்னிடத்துள்ளவனாவான். நானும் அவனிடத்திருந்து அவனுக்கு அநுக்கிரகம் செய்வேன்.

(அக்கினி, ஜலம், கற்பகவிருட்சம் இம் மூன்றும் இராகத்துவேஷமுடையவை யல்லவேனும் தம்மை யடைந்தவர்களது குளிரையும், வெப்பத்தையும், குறையையும் முறையே தவிர்ப்பதுபோல், ஈசனும் தம்மை யடைந்தவர்க்கருள் செய்வார். மற்றையர்க்குச் செய்வதில்லை.)

ஒருவன் உணவு முதற்கொண்டு எனக்கே அர்ப்பணம்செய்து, என்னிடத்தில் அநந்நிய பக்தி யுடையவனாயின், அவன் மிக்க துராசாரமுடையவனாயினும் சாதுவே யாவன். அவன் துராசாரமுடையவனா யிருந்திருப்பினும் என்னிடத்துவைத்த பக்திப் பிரபாவத்தால் எப்போதும் துன்பமில்லாது நித்தியமான நிரதிசயானந்த மோட்சத்தையே யடைவான் என்பது சத்தியமே.

வேளாண்மை, வாணிபம் முதலிய எத்தகைய தொழில் செய்பவராயினும், இன்னும் தாழ்ந்த தொழில் செய்பவராயினும், ஸ்திரீகளாயினும் என்னிடத்து அநந்நிய பக்தி வைப்பராயின் அத்தகையோர் பந்தத்தினின்றும் விடுபட்டுப் பரகதி யடைவாரெனின், மன்னர்களும் பிராம்மணர்களும் என்னிடத்து வைத்த பக்தியால் பிறப்பிறப்பை யொழித்து முத்தியின்பமெய்துவர் என்று கூறவும் வேண்டுமோ? (தொடரும்)

சீடன்.

ஆனந்தபோதினி வாழ்த்து.

கலி வெண்பா.

a விண்ணளியா லோங்கும் விரிநீர் தனையுடுத்த
மண்ணளிக்க வந்தநம் மக்களுக்கு — நண்ணிப் (1)
பழுத்தது போலும் b பயன்மரம் உள்ளூர்
வழுத்திறைவன் தண்ணருளை வாய்ந்தெண் — ணெழுத்தால் (2)
அறிவைப் பெருக்கி யறம்பொருளோ டின்பச்
c செறிவைச சிறப்பிக்கச் செய்யும் — d நெறியுதவிப் (3)
பொற்குலத்தை e வெற்பிற் பொருந்துவிளக் கிற் f புரக்கும்
நற்குணத்தை நல்கி நயந்தருளும் — g அற்பும் (4)

a மேகத்தின் சகாயத்தால், b பலனைத்தரும் மரம், c மிகுதியை, d வழியைக் காட்டி, e மலைமேல் வைத்த தீபம்போல், f பாதுகாக்கும், g அன்பும்.

விருத்தியுற வைத்து வியனொற் றுமையைப்
பொருத்தியின்ப வாழ்விற் புகுத்தி — நிருத்தமிடும் (5)
ஆனந்த போதினியே ! ஆரேயுன் மாட்சிதனைத்
தேனூந்து சொற்களால் செப்பவல்லார் ? — மானே ! (6)
"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற" வென்று — தக்க (7)
திருவள் ளுவராண் மகற்சுட்டிச் செப்பும்
திருமொழிக்கு நீயுஞ் சிறந்தாய் — உரிமையுடன் (8)
உன்னை யளித்திவ் வுலகைமகிழ் விக்குமவன்
என்னதவஞ் செய்தானோ யாமறியேம் — அன்னவன்றான் (9)
நீர்வளஞ்சூழ் நல்ல நிலனும் பணியாளும்
ஏர்வளனு மாடு மெழில்வீடும் — பேர்விளங்கும் (10)
தொல்குலனு மன்பார்ந்த சுற்றமுநட் பும்புகழை
நல்கு நறுங்கல்வி நல்லறிவும் — பல்வளஞ்செய் (11)
பொன்னு மணியும் பொற்கலனுங் கற்புநலன்
மன்னு மனையு மகப்பேறுந் — துன்னித்தீர்க் (12)
காயு ளொடுநோ யற்ற பெரும்வாழ்விங்
கேயவே வாழ்கவென வேத்தியே — நேயமுடன் (13)
இல்லையெனுஞ் சொல்லிவன்கண் இல்லையென வந்தவர்தந்
தொல்லைதவிர்த் தாதரிக்குந் தூயவனும் — வல்ல (14)
கடவுள்விசு வாசங் கடவாதான் இந்தப்
புடவியின்பாற் றக்கவரைப் போற்றுந் — திடமுடையான் (15)
ஆகவே யாகா தறையஇவன் சீரிவன்றான்
நாகவே டென்னு நறும்பதியான் — மோகவேள் (16)
போற்றுஞ்செவ் வேளின் புனிதமலர்த் தாள்மறவா
தேற்று மனதுடைய ஏந்தல்காண் — சாற்று முனி (17)
சாமியெனு நாமந் தழைக்கவடைந் தோன்கங்கை
யாமின் குலதிலகன் ஆண்டகையான் — நாமுரைக்க (18)
நீடூழி தன்பத் திரிகையுடன் நீணிலத்தில்
h பீடேன்றி வாழ்க பெரிது. (19)

ம. இராஜகோபால பிள்ளை,
கோமளேசுவரன் பேட்டை.

---

h கீர்த்தியை நிலைக்கச் செய்து.

அம்பாலிகை அல்லது அதிசய மரணம்.

(278-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆனந்தஸிங் "இப்போதொன்றும் கேட்காதே எல்லாம் பின்னால் தெரியும்" என்று கூறிவிட்டு கொல்லப்பட்டிருக்கும் சவத்தை நோக்கிச் சென்றான்.

ஆனந்தஸிங்கின் மனதில் இப்போது ஒரு புது யோசனை யுண்டாய் விட்டது. என்னவெனின் பவானிமேல் பெரிய சந்தேகம் தோன்றிவிட்டது. ஏனென்றால் இப்போது பெட்டியிலிருக்கும் சவம் அம்பாலிகை யல்லவென்று அவனுக்கு நன்றாய்த் தெரியும். அதிலிருப்பது வேறொரு கன்னிகையின் சவமென்றும் அவளுடைய கூந்தல்மட்டும் அம்பாலிகையின் கூந்தலைப்போலவே செழித்து நீண்டு வளர்ந்திருக்கிறதே யொழிய மற்றபடி உருவம் வேறு உருவமே யென்றும், அதோடு அவள் இறந்து ஒரு வாரத்திற் கதிகமாகி யிருக்கவேண்டுமென்றும் அவனுக்கு நன்றாய்த் தெரியும்.

பவானி தான் கூறியதை மறுத்து இப்போதிருக்கும் சவம் அம்பாலிகை யுடைய சவமே யென்று ஒரே பிடிவாதமாய்ச் சாதிக்கவே, "ஓகோ, இவள் கறுப்பண்ணனைச் சேர்ந்தவளே. இவள் செய்ததெல்லாம் பாசாங்கே. நம்மை யழைத்துப்போனதால் தங்கள் நோக்கப்படி காரியம் சித்தியாகவில்லை யென்றும், அதற்குமாறாய் நம்மால் உண்மை கண்டு பிடிக்கப்பட்டு தங்களுக்கே ஆபத்தாய் முடிந்தாலும் முடியுமென்றும் கறுப்பண்ணன் தெரிந்துகொண்டான். ஆகையால் நம்முடைய உளவுகளையும் யோசனைகளையும் தெரிந்து கொள்வதற்கும் இப்போது சவப் பெட்டியிலிருப்பது அம்பாலிகையின் உருவமே, அதாவது அம்பாலிகை யிறந்துபோனது உண்மையே யென்று நம்மை நம்பும்படி செய்யவும் எண்ணிக்கொண்டு இவளை நம்மிடம் அனுப்பி யிருக்கிறான். இவள் அப் பெண்பிறந்ததுமுதல் அவள் கூடவே யிருந்தவளானதால் இவள் நமது சார்பாய்ப் பேசுவதையும் அத்தேகம் அம்பாலிகையுடைய தென்று கூறுவதையும் நாம் நம்பி ஏமாந்து விடுவோமென்று எண்ணி யிந்த யோசனை செய்திருக்கிறார்கள்" என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டான்.

ஆனந்தஸிங் கொல்லப்பட்டவன் சவத்தருகில் சென்று அதைக் கீழே கிடத்திச் சோதித்தான். அதனுடைய உட்சட்டை கிழிக்கப்பட்டு இருதயத்திற்கு நேராய் ஒரு மெல்லிய ஈட்டியால் குத்தப்பட்டிருந்தது. ஆனந்தஸிங் அச்சவத்தை மிக்க அக்கரையோடும் கவனத்தோடும் சோதித்தான். அதில் அவன் தன் சாமார்த்தியத்தை யதிகமாய்க் காட்டினான். அந்த விவரம் முழுமையும் பின்னால் போகப்போக விளங்கும்.

அவன் அங்கிருந்து திரும்பி பவானியிடம் வந்ததும் "சரி புறப்படு செல்வோம்" என்றான். உடனே இருவரும் புறப்பட்டு வண்டி நின்றிருக்குமிடத்திற்குச் சென்று ஏறிக்கொண்டு நகரத்தைச் சேர்ந்தார்கள்.

ஆனந்தலிங் பவானியிடம் அவசியமானமட்டுமே பேசினானன்றித் தன் மனதிலிருப்பவற்றில் ஒன்றையேனும் வெளியிட்டவனல்ல.

பவானியோ அதிகமாய்ப் பேசினாள். ஒரு சமயம் அவள் வார்த்தைகளால் "சே இவள் உளவாளியல்ல உண்மையானவளே யென்று ஆனந்தலிங் மனதில் தோன்றியது. மறுசமயம் அவளுடைய வார்த்தைகள் அவள் மோசக்காரியே யென்று நினைக்கச் செய்தன.

இருவரும் ஆனந்தலிங்கின் அறையில் உட்கார்ந்ததே பவானி "என்னை மறுபடி யெப்போது வரச்சொல்லுகிறாய்?" என்றாள்.

ஆனந்த:—எப்போது ஏதாவது சங்கதி கிடைக்கிறதோ அப்போது வா.

பவானி:—இந்தக் கறுப்பண்ணனைக் கைது செய்யமாட்டாயோ? அவன் தன் துஷ்டச் செயல்களுக்கு அனுகூலமாய் இன்னும் சுயாதீனத்தோடு உலவிக்கொண்டிருக்கும்படி விட்டு வைக்கத்தான் போகிறாயோ?

ஆனந்:—அது போகப்போகத்தான் தெரியும்.

பவானி:—நீ யவனைக் கைது செய்யாவிட்டால் நான் நடந்த சங்கதிகளனைத்தும் நியாயாதிபதிக்குத் தெரியப்படுத்தி விடுவேன்.

ஆனந்:—எனக்குத் தெரிவிக்காமல் அப்படியொன்றும் செய்துவிடாதே. உன் எண்ணமே யடியோடு கெட்டுவிடும்.

அவன் இப்படிக் கூறவே ஆனந்தலிங்குக்கு மறுபடி மனதில் கலவரமும் சந்தேகமுமாய்விட்டது. பவானி சற்றுநேரம் சும்மா யிருந்து மறுபடி யவனை நோக்கி,

"நீ யெனக்கு உதவியாயிருப்பதாக வாக்குறுதி கூறவேண்டும். இன்றேல் நான் கட்டாயம் எல்லா சங்கதிகளையும் வெளியிட்டுவிட வேண்டியதே" என்றாள்.

ஆனந்:—ஏன் ?

பவானி:—"இன்றேல் அவன் என்னைக் கொன்றுவிடுவான்" என்றாள்.

ஆனந்தலிங் சற்று சிந்தித்து "நீ நாளை யிரவு வா. அதைப்பற்றி சிந்திக்கலாம்" என்றான்.

பவானி யுடனே விடைபெற்றுக்கொண்டு சென்றாள்.

ஆனந்தலிங்குக்கு இப்போது மிக்க கலவரமும் சந்தேகமுமுண்டாய்விட்டன. சங்கதியை வெளியிட்டு விடுவேன் என்று அவள் கூறியதுகூட தன்னை யேமாற்றுவதற்கே யிருக்கலாகும் என்று அவன் மனதிற் றோன்றியது. கறுப்பண்ணனைக் கைது செய்யலாமெனின் அவன் ருசுவிற்கு வரக்கூடிய குற்றம் எதையேனும் செய்ததாக இன்னும் தெரியவில்லை. மேலும் வியவகாரங்கள் இப்போதிருக்கிற நிலைமையில் எந்த நிமிடத்தில் வேண்டுமாயினும் எல்லா ருசுக்களும் மனோகரனுக்கு ஆபத்தை

யுண்டாக்கத்தக்க விதமாய்த் திரும்பிவிடலாம். இந்தப் பவானியே அவனுக்கு விரோதமான முதற் சாக்ஷியாய்த் திரும்பிவிடலாம். இதனால் அவனுக்கு எதுவும் கலவரமாகவே யிருந்தது. விஷயம் அவன் பிரியப்படி நடைபெறத் தொடங்கவில்லை.

மறுநாட் காலையில் நேர்ந்த ஒரு சம்பவம் ஆனந்தலிங்கிற்கு இன்னும் பெரிய விபரீத சந்தேகத்தையும் கலவரத்தையும் உண்டாக்கிவிட்டது. எப்படி யெனில் மறுநாட்காலை ஒரு வேலையாக ஆனந்தலிங் ஹுரியாற்றின் மேற்பக்கமாய்ச் சற்று தூரத்திலிருக்கும் ஒரு கிராமத்திற்குப் படகிற் சென்றான்.

அவன் படகின் அடித்தட்டிலிருந்து மேல்தட்டிற்குச் செல்லும் ஏணிவழியாய் ஏறும்போது அங்கு எதிரிலிருந்த ஒரு நிலைக்கண்ணாடியில் பிரதிபலித்த ஒரு உருவத்தைக் கண்டதே சட்டென்று மூச்சுத் திணறி பிரமித்து அசைவற்று நின்றான். அவ்வுருவம் இரண்டொரு விநாடியே அங்கு தோன்றி யிருந்தது. ஆ அதற்குள் அந்த அழகிய உருவம் சவக்குழியில் அழுகிக் கொண்டிருக்கிறதென்று யாவராலும் கருதப்படும் அம்பாலிகையின் உருவமே யென்று அவன் மனதில் அய்யமறத் தோன்றியது. "இது எப்படி யுண்மை? இச்சம்பவம் நேர்ந்தது முதல் நம் மனதில் அவள் கவனமே யிருந்ததால் இப்படித் தோன்றியதோ. இப்படி நேர்வது அனுபவம்" என்று அவன் சற்றுநேரம் நின்று சிந்தித்தான். இது வெறும் பொய்த் தோற்றமென்றே தோன்றியது. அவன் கலவரத்திற்கு அளவில்லை அதோடு அச்சமயம் அவனுக்குத் தெரிந்தவரையில் நாற்பக்கங்களிலும் ஒரு ஆளாவது இல்லை.

கடைசியில் அப்படி ஒருவருடைய நிழல் தோன்றியதாயின் இப்படகின் எப்பாகத்திலாவது அந்த ஆள் இருக்கவேண்டுமல்லவா? ஆகையால் படகு முழுதும் (பெரிய ஆறுகளில் செல்லும் படகுகள், சிறிய கப்பல்கள் போன்றனவே) தேடினான். எங்கும் அத்தகைய ஆள் அகப்படவில்லை. தன் துப்பறியும் சாமார்த்தியத்தைக் கொண்டு படகிலிருந்த ஆட்களை விசாரித்தான். அவர்களில் ஒருவன் தாங்கள் சொல்வதுபோல் அழகிய பெண் முகத்தோடு ஒரு சிறுவன் இருக்கிறானே யொழிய வேறு யாருமில்லை யென்றான்.

ஆனந்தலிங் கடைசியில் இது நமது மனதிலிருந்துண்டான பொய்த் தோற்றமேயென்று தீர்மானித்துக்கொண்டு, தான் இறங்கவேண்டிய விடத்தில் படகைவிட் டிறங்கிவிட்டான்.

இதற்கிடையில் மயானபூமியில் இறந்துபோயிருந்த ஆசாமியின் சவம் கண்டுபிடிக்கப்பட்டு சவங்கள் சோதனை செய்யப்படும் இடத்திற்குக் கொண்டுபோகப்பட்டது. பத்திரிகைகளில் அவன் தற்கொலை செய்துகொண்டதாய் கூறப்பட்டிருந்தது. ஆனந்தலிங்குக்கு அதன் உண்மை தெரியும். ஆனால் அவன் மௌனமா யிருந்தான்.

ஆனந்தஸிங் அன்றிரவு தன் அறையிலேயே உட்கார்ந்துகொண்டிருந்தான். ஏதோ விசேஷ சமாசாரம் வருமென்று அவன் மனதில் தோன்றியது.

அவன் கருதியபடியே பவானி வந்தாள். அவள் முன்தினமிருந்ததுபோலவே மிக்க கலவரமும் ஆத்திரமும் துடிதுடிப்புமான மனதோடிருந்தாள்.

ஆனந்தஸிங்:—என்ன சங்கதி ?

பவானி:—நாம் இன்று மறுபடி சவக்குழிக்குப் போகவேண்டும்.

ஆனந்:—என் மறுபடி செல்வது ?

பவா.—அங்கிருக்கும் சவம் அம்பாலிகையின் சவந்தானாவென்று திட்டமா யறியவேண்டும்.

ஆனந்:—என் நேற்று பார்த்தோமே ?

பவா:—ஆயினும் நேற்று இருந்த மனக்குழப்பத்தால் நான் சரியாய் கவனிக்கவில்லைபோ லிருக்கிறது.

ஆனந்:—அப்படியானால் இடையில் ஏதோ சம்பவம் நேர்ந்து உன் அபிப்பிராயத்தில் சந்தேகத்தை யுண்டாக்கிவிட் டிருக்கவேண்டும்.

பவானி.—ஆம். மிக்க மனத்திடுக்கை யுண்டாக்கத்தக்க சம்பவம்.

ஆனந்.—என்ன அது ?

பவானி:—நான் உயிருக்குத்துணிந்து அச்சண்டாளர்களாகிய கறுப்பண்ணனும் அவன் துஷ்டக் கூட்டாளியுமான மலையாளத்தானும் இரகசியமாய்ப் பேசுவதை யுற்றுக் கேட்கிறேனென்று கூறியிருக்கிறேனல்லவா ?

ஆனந்:—ஆம்.

பவானி:—இன்று நான் உற்றுக்கேட்டதில் என் மனதில் பயங்கரமான யோசனைகளுண்டாய்விட் டிருக்கின்றன.

ஆனந்:—நீ யென்ன உற்றுக்கேட்டாய் ?

பவானி:—கறுப்பண்ணனும் அவன் கூட்டாளியாகிய மலையாளத்தானும் உன்னைப்பற்றிச் சச்சரவு பட்டுக்கொண்டார்கள்.

ஆனந்:—என்னைப்பற்றியா? என்?

பவானி:—உன்னை இதில் சம்பந்தப்படுத்தலாகாதென்று மலையாளத்தான் ஆரம்பத்திலேயே ஆக்ஷேபனை செய்தானாம்.

ஆனந்:—இருக்கட்டும். அதற்கும் இச் சங்கதிக்கும் என்ன சம்பந்தம் ?

பவானி:—நான் சொல்வதைக் கேள். இப்போது மலையாளி மனோகரனைக் கொன்றுவிட வேண்டுமென்று கூறுகிறான். (தொடரும்.)

ஆரணி. குப்புசாமி முதலியார்.

பஞ்சாங்க அறிவிப்பு.

முன்னதாகத் தவணைக்குள் சந்தாவைச் செலுத்திய சந்தா நேயர்கட்கெல்லாம் பங்குனிமாதம் 1௨ முதல் அம்மாதக் கடைசிக்குள் பஞ்சாங்கம் அனுப்பப்படும். பத்திராதிபர்.

பாரசீக தேசத்தில் சுதேசி இயக்கம்.

"பார்வாடு" பத்திரிகை பின்வருமாறு எழுதி யிருக்கின்றது:— பாரசீக தேசத்திலுள்ள பார்லிமெண்ட் சபை ஒரு புதிய சட்டத்தைச் செய்திருக்கின்றது. அந்தச் சட்டத்தின்படி அரசாங்கத்தில் வேலை பார்க்கின்ற உத்யோகஸ்தர்கள் எல்லோரும் தங்கள் உத்தியோகசாலையில் வேலை செய்யும்பொழுது பாரசீகதேசத்தில் செய்யப்பட்ட சுதேச ஆடைகளையே அணிந்துகொள்ளவேண்டுமாம். பார்லிமெண்டு சபையின் அங்கத்தினர்களும், மந்திரிகளும், கவர்னர்களும், நீதிபதிகளும் அந்தச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்று தெரிகிறது. அந்தச் சட்டத்தை மீறி நடப்பவர்களுக்கு, முதலில் கொடுக்கப்படுகின்ற சம்பளத்தில் 100-க்கு ½-வீதம் குறைக்கப்படும். ஆறுமாத காலத்திற்குப் பிறகு இந்தச் சட்டத்தை மீறி நடக்கின்றவர்களின் சம்பளம் 100-கு 1-வீதம் குறைக்கப்படும்.

ஒரு மஹான்.

திபெத்திற்குச் சமீபத்தில் போய்வந்த கூட்டத்தாரைச் சேர்ந்த மேஜர் கிராஸ் என்ற வெள்ளைக்காரர் பாஞ்சியம் என்ற இடத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியபொழுது, சில ஆச்சரியப்படத்தக்கவிஷயங்களை வெளியிட்டார். அவர் இமயமலையில் 240 வயதுள்ள ஒரு வயோதிக குருவைக் கண்டார். பிரமஞான சங்கத்தை ஆதியில் ஸ்தாபித்த மாடம் பிளாவட்ஸ்கி என்ற மாது முன்னம் இந்தியாவிற்கு வந்திருந்தார். அம்மாதுக்கு இவர் (Kut-humi Lal கூட்ஹூமிலால்) குருவா யிருந்தவராம். அவருக்கு விசேஷ சக்திகளுண்டாம். கணித சாஸ்திரத்தில் நிபுணராக விளங்குகிறாராம். தமது அவயவங்களைப் பெரிதாக்கிக் கொள்ளவும், சிறிதாக்கிக் கொள்ளவும் நினைத்த மாத்திரத்தில் திடீரென்று மறைந்துவிடவும், திடீரென்று தோன்றவும் அவரால் முடிகிறதாம். இமயமலையிலுள்ள மஹான்களை யெல்லாம் விட இவர் பெரியவராகக் காணப்படுகிறாராம். அவருக்குள்ள சக்தியினால் அவர் ஜீவியகாலத்தை அதிகப்படுத்திக்கொண்டு போகிறாராம். 1927-ம் வருஷத்தில் கொடுமையான பஞ்சத்துடன் ஒரு பெரிய யுத்தம் ஆரம்பமாகுமென்று அவர் சொல்லுகிறாராம். ஒரு குழந்தைமூலமாக அவர் அபாரச் செயல்களைச் செய்து காண்பித்ததுடன், ஒரு கண்ணாடியின்மீது சிறிது நேரம் தனது பார்வையை ஒருமித்துச் செலுத்தியதினால் அக்கண்ணாடி துண்டுத் துண்டாக உடைந்து போயிற்றாம்.

நமது நாட்டில் இத்தகைய மகான்கள் அனேகர் உளர். இவர்கள் அட்டமா சித்தி கைவந்தோர். கூட்ஹூமிலால் என்பவர் பஞ்சாப் தேசத்தவர். வருடாவருடம் இவர்கள் புது சீடர்களைப் பொறுக்கிச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். அனேகர் இத்தகையோரைத் தரிசித்து வந்திருக்கிறார்கள்.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

உருத்ரோத்காரி௵ பங்குனிமீ—கலி 5025-சாலிவாகனம் 1846
பசலி 1333—கோல்லம் 1098-99—ஹிஜரி 1342
இங்கிலீஷ் 1924௵ மார்ச்சுமீ—ஏப்ரல்மீ

பங்குனி	மார்ச்சுமீ	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
1	13	வியா	சப்7-28	ரோ5-18	மர60	சம்பத்கௌரிவிரதம்
2	14	வெ	அ12-40	மிரு12-15	சித்60	யாத்திரை விலக்க
3	15	சனி	நவ17-13	திரு18-15	சித்60	பிரயாணம் தவிர்க்க
4	16	ஞா	தச20-23	புன22-38	சித்60	சீமந்தம், காதுகுத்த
5	17	திங்	ஏ21-43	பூச25-20	சித்60	மத்வசர்வ ஏகாதசி
6	18	செவ்	து21-5	ஆயி26-40	சித்60	கரிநாள், பிரதோஷம்
7	19	புத	திர18-43	மக25-28	சி25-28அ	காமதஹனம்
8	20	வியா	ச○14-38	பூர22-58	சி22-58ம	பங்குனி உத்திரம், ஒலி பண்டிகை
9	21	வெ	பௌ9-20	உத்19-8	சித்19-8அ	வசந்தோற்சவம்
10	22	சனி	பிர2-45 துதி55-35	அஸ்14-15	மர60	சாதுர்மாஸ்யதுதியா பால்குணபகுளம்
11	23	ஞா	திரி48-3	சித்9-0	சித்60	யாத்திரை விலக்க
12	24	திங்	சது40-43	சுவா3-20 விசா57-50	அ3-20சித்	வியாசராயர் தீர்த்தம்
13	25	செவ்	பஞ்33-38	அனு52-53	சி52-53ம	
14	26	புத	சஷ்27-13	கேட்48-40	சி48-40ம	
15	27	வியா	சப்21-40	மூல45-20	சித்60	
16	28	வெ	அ17-18	பூரா43-10	பி43-10சி	
17	29	சனி	நவ13-58	உத்42-5	சித்60	
18	30	ஞா	தச11-43	திரு42-8	அ43-8மர	
19	31	திங்	ஏ10-40	அவி43-13	சித்60	
20	1924௵ ஏப்ரல்மீ 1	செவ்	து10-45	சதை45-30	மர60	
21	2	புத	திர10-40	பூரட்48-35	அ48-35சி	
22	3	வியா	ச●13-45	உத்-52-43	சித்60	சர்வத்திர அமாவாசை
23	4	வெ	அ16-43	ரேவ-57-40	அமி60	ரைவதமன்வாதி
24	5	சனி	பிர20-45	அசுவனி60	சித்60	திருதினஸ்பிருக், யுகாதி பண்டிகை [க்க
25	6	ஞா	துதி25-30	அசு3-30	சித்60	கதிரறுக்க, அடுப்பு வை
26	7	திங்	திரி31-3	பர✕10-18	சி10-18ம	கிருத்திகை, மச்ச ஜயந்தி
27	8	செ	சது37-3	கிரு17-28	சி17-28அ	மாசசதுர்த்தி விரதம்
28	9	புத	பஞ்43-18	ரோ24-58	சித்60	லட்சுமி பஞ்சமி, ஸ்ரீ பஞ்
29	10	வியா	சஷ்49-15	மிரு32-20	மர60	சஷ்டி [சமி
30	11	வெ	சப்54-25	திரு39-5	சித்60	கங்கோற்பத்தி
31	12	சனி	அ58-20	புன44-48	சித்60	33-20முதல் 53-20 வரை விஷு புண்ணியகாலம்

சூரி	சுக்		
கே புத	6௳ மீன-பு 17௳ ரிஷ-சு 20௳ மேஷ-புத 31௳ மக-செ		
			ராகு
செ	குரு	சனி	

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE
'ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY ST., MADRAS.